பெரியபுராணக் கதைகள்

மூன்றாம் பாகம்

வானதி பதிப்பகம்

1/2

பெரியபுராணக் கதைகள்

மூன்றாம் பாகம்

கவிஞர் தே. ப. பெருமாள்

வானதி பதிப்பகம்
13, தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

முதற் பதிப்பு	:	நவம்பர், 1976
இரண்டாம் பதிப்பு	:	மே, 1979
மூன்றாம் பதிப்பு	:	1983
நான்காம் பதிப்பு	:	1985
ஐந்தாம் பதிப்பு	:	1990
ஆறாம் பதிப்பு	:	ஏப்ரல், 1998
ஏழாம் பதிப்பு	:	ஏப்ரல், 1999

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை : ரூ. 15 -00

❑ TITLE	:	PERIYA PURANAK KADAIGAL - PART - III
❑ AUTHOR	:	KAVIGNAR T.P. PERUMAL
❑ LANGUAGE	:	TAMIL
❑ EDITION	:	SEVENTH EDITION, APRIL 1999
❑ PAGES	:	110 PAGES
❑ PUBLISHED BY	:	VANATHI PATHIPPAKAM 13, DEENADAYALU STREET THYAGARAYA NAGAR CHENNAI - 600 017
❑ PRICE	:	Rs. 15.00

லேசர் அச்சு : சபாநாயகம் ஆப்செட்
73-A, கீழரத வீதி
சிதம்பரம் - 608 001
✆ : 23040

அச்சிட்டோர் : யுனைடட் பைண்ட் கிராபிக்ஸ்
101-D, ராயப்பேட்டை நெடுஞ்சாலை
லஸ், மயிலாப்பூர்
சென்னை - 600 004
✆ : 4984693

1/2

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் ஸ்ரீ மடம்

காஞ்சீபுரம்

முகாம் : ஜாம்ஷெட்பூர் (பீகார்) தேதி : 15-8-74

பொதுஜனங்களிடையே, முக்கியமாக மாணவர்களிடையே வாழ்க்கையின் மேன்மைக்கு அடிப்படைக் காரணங்களான கடவுள் பக்தியையும், நல்லொழுக்கத்தையும் அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் சென்னை வானதி பதிப்பகத்தின் உரிமையாளர் ஸ்ரீ திருநாவுக்கரசு பக்தர்களின் வரலாறுகள் அடங்கிய பெரியபுராணக் கதைகளைக் கவிஞர் ஸ்ரீ தே. ப. பெருமாளின் மூலம் எழுதச் செய்து நூல் வடிவில் வெளியிட முன்வந்திருப்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறோம்.

நம்முன் இருக்கும் இந்நூலின் பகுதியில் தேர்க்காலில் சிக்கி உயிரிழந்த கன்றுக்காகத் தன் குமாரனின் மீது தேரைச் செலுத்திய மனுநீதிச்சோழன், இறைவனால் ஆட்கொள்ளப்

பட்ட ஸுந்தரமூர்த்தி நாயனார், உண்மையான பக்தியாலும், ஒழுக்கத்தாலும், உயர்ந்த பேறடைந்த திருநீலகண்ட நாயனார் முதலிய பக்தர்களின் வரலாறுகள் எளிய பதங்கள் அடங்கிய செந்தமிழ் வசன நடையில் விளக்கப் பட்டிருக்கின்றன. அந்தந்தக் கதைகளிலிருந்து வெளியாகும் நீதிகளும் தெளிவாக்கப்பட்டிருக்கின்றன.

இந்நூலின் ஆசிரியர் மேன்மேலும் மற்ற பெரிய புராணக் கதைகளையும் மற்றும் அனேக பக்திக் கதை களையும் எழுதிக்கொண்டு வாழ்க்கை நலன்களை அடையு மாறும், சிறந்த கடவுள் பக்தரான ஸ்ரீ திருநாவுக்கரசை உரிமையாளராகக் கொண்ட வானதி பதிப்பகமும் மேன்மேலும் கடவுள் பக்தியையும், நல்லொழுக்கத்தையும் வளர்க்கக் கூடிய இத்தகைய நூல்களை வெளியிட்டுக் கொண்டு அபிவிருத்தி யடையுமாறும் ஆசீர்வதிக்கிறோம்.

ஸ்ரீநாராயண ஸ்மிருதி

 1/2

முன்னுரை

பிள்ளைப் பிராயத்திலிருந்தே ஒவ்வொருவர் உள்ளத்திலும் இறையுணர்வு ஊன்றப் பெறுதல் வேண்டும். இது, நமது முன்னோர்கள் கருத்தோடும் உன்னிப்போடும் நடைமுறைப் பழக்கத்தில் மேற்கொண்ட வழக்கமாகும். இவ்வாறு இறையுணர்வு கொள்ளப் பெறுவோர், தூய நினைவுகளில் தோய்ந்து, நல்ல பண்புகள் நிரம்பி நல்மான வாழ்வைப் பெறுவர்.

இறையுணர்வை எழுப்புகின்றவற்றுள் சைவ அடியார்கள் வரலாறு குறிப்பிடத்தக்கது. இத்திருத் தொண்டர்கள், ஏற்றமான பண்புகளோடு இன்பத்தையும் துன்பத்தையும் இணையாகப் பாவித்து, தாம் ஒழுகிவந்த நேரிய நெறி முறையில் வழுவாத இயல்பு கொண்டவராய் விளங்கினர். பிறை சூடிய பெருமான் மீது இடையறாப் பற்றுக் கொண்ட இவ்வடியார்களது சீரெல்லாம் செப்பும் செந்தமிழ்த் திருநூல், சேக்கிழார் பெருமானின் திருத் தொண்டர்புராணமாகும். இதையே பெரியபுராணம் எனக் கூறுவர். என்றாலும் இது ஒரு சிறந்த வரலாற்று நூலேயாம். இப்பெரிய புராணத்திலுள்ள திருஅடியார்கள் அருள் வரலாற்றில் பதினான்கு இந்நூலினுள் எளிய இனிய

உரைநடையில் தரப்பட்டுள்ளன. இது மூன்றாம் பாகமாய் வெளிவருகிறது. முதற்பாகம், இரண்டாம் பாகம் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது. பிற அடியார்கள் வரலாறும் இவ்வாறு வெளிவர இறையருள் கூட்டுமென எண்ணு கிறேன். இந்நூல் சிறுவர்களுக்கு - மாணவர்களுக்கு மட்டு மின்றி ஏனையோர்களுக்கும் பயன் தரவல்லது.

இந்நூலுக்கு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத் குரு, தவத்திரு சங்கராசார்ய சுவாமியவர்கள் வழங்கியுள்ள அருளாசியை நான் பெரும் பேறாகக் கருதுகிறேன். அவர்களுக்கு அன்பு கமழும் என் நெஞ்சமலர்க் காணிக்கை. இந்நூலை என்னை எழுதத் தூண்டியவரும், திருமறை நூற்களை வெளியிடுவதில் சிந்தை கொண்டவரும் இறை பக்தருமாகிய வானதி பதிப்பகம் உரிமையாளர் திரு. ஏ. திருநாவுக்கரசு அவர்களுக்கும் என் இதயம் தோய்ந்த நன்றி.

தே. ப. பெருமாள்

சென்னை - 14
14.10.1976

பதிப்புரை

பக்திக் கதைகளை மக்கள் படித்தால் மக்களிடையே நல்லொழுக்கமும் இறையுணர்வும் பெருகும்; பண்பாடு வளரும்; மக்கள் அறவழியில் நடக்க உதவியாக இருக்கும் என்று கருதிக் கருணை உள்ளத்தோடு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் பெரியபுராணக் கதைகளை எளிய தமிழில் தொகுத்துச் சிறுசிறு புத்தகங் களாக வெளியிடும்படி அருளாணை பிறப்பித்தார்கள். அவர்கள் கட்டளைக்கிணங்க கவிஞர் தே. ப. பெருமாள் அவர்களைக் கொண்டு பெரியபுராணக் கதைகளை மாணவரும் மற்றவர்களும் புரிந்து கொள்ளும் வண்ணம் எழுதச் செய்தேன். கவிஞர் தே. ப. பெருமாள் அவர்கள் அற்புதமாக எழுதியுள்ளார்கள். அதனைப் பக்தி சிரத்தை யோடு வெளியிட்டுள்ளேன்.

மக்கள் நலன் கருதி பெரியபுராணக் கதைகளை வெளியிடச் செய்த கருணை உள்ளம் படைத்த காஞ்சிப் பெரியவர்களை நன்றியறிதலோடு போற்றி வணங்கு கிறேன். பெரியபுராணக் கதைகளைத் தொகுத்து எழுதித் தந்த கவிஞர் தே. ப. பெருமாள் அவர்களுக்கு நன்றி.

தமிழ் மக்கள் இதனைப் போற்றிப் படித்துப் பயனடைவார்கள் என்று நம்புகிறேன். இதனைத் தொடர்ந்து பெரியபுராணத்திலுள்ள ஏனைய கதைகளும் வெளிவரும்.

வணக்கம்

அன்புள்ள
ஏ. திருநாவுக்கரசு
வானதி பதிப்பகம்

இந்நூலினுள்...

1. சிவநெறி காத்த செம்மல்

சமயம் தெய்வ அருளுக்கு வழிகாட்டுதலோடு நல்ல ஒழுக்கத்தையும் வாழ்வையும் தருவது. எனவே தான் முற்காலத்தில் மன்னர்களும், மதிநல அமைச்சர் களும் மற்றுமுள்ள பெரியோர்களும் சமயத்தைப் பேணிக் காத்தார்கள். இத்தகைய பெருமக்களில் அமைச்சர் குலச்சிறை நாயனாரும் ஒருவர். அவரது வரலாறே அடியில் வருவது.

செந்தமிழ் வளர்த்த திருநாடு பாண்டியநாடு. இந் நாட்டில் செழுமை கொண்டு சிறந்த ஊர் மணமேற்குடி என்பது. இங்குக் குலச்சிறைநாயனார் என்ற பெயரில் ஒருவர் வாழ்ந்து வந்தார்.

இவர் சிவபெருமானிடம் சிந்தை செலுத்தியவர். அவரது அடியார்கள் எக்குலத்தவர் ஆயினும் வேற்றுமை கருதாது அவர்களுக்கு வேண்டும் தொண்டுகள் செய்து வருவார். அதையே தம் வாழ்வின் பெரும் பேறாகக் கருதினார். இதனாலேயே சுந்தர மூர்த்தி நாயனாரும் இவரை 'பெருநம்பி' எனச் சிறப்பித்திருக்க வேண்டும்!

இவர் மதுரை மாநகரை ஆண்ட மன்னன் நின்றசீர் நெடுமாறனிடம் முதன்மை அமைச்சராக இருந்து மக்கள் நலனைப் கருத்தாகப் பேணி வந்தார். சைவ சமயத்துக்குப் பிற சமயத்தினரால் இன்னல் நேர்ந்த போது இவர் திருஞானசம்பந்தப் பெருமானை அழைத்து வந்து அத்துயரை அகற்றியவர். சைவத்தைப் பேணுவதில் முழுமூச்சுடன் ஈடுபட்டிருந்த அரசியார் பாண்டிமாதேவிக்கு பக்க உதவியாளராக இருந்து தொண்டுகள் செய்து வந்தார். இவர் அமைச்சராக நீண்டகாலம் பணிபுரிந்து நாடெங்கும் சைவத்தைத் தழைக்க வைத்து இறைவன் திருவடி சேர்ந்தார்.

நாட்டு நலனைக் காக்க அரசர்களுக்குத் துணை யாக இருந்த அமைச்சர்கள், சமயத்தைப் பேணுவதிலும் கருத்துக் கொண்டிருந்ததைக் குலச்சிறை நாயனார் வரலாறு தெரிவிக்கும்.

2. குரு அருளை நாடிச் சென்றவர்

சிறப்பு மிக்கது மழலை நாடு. இதன் தலைநகர் பெருமழலை என்பது. இது செழிப்பு மிக்கது. மாவும் தென்னையும் எங்கும் அடர்த்தியாக வளர்ந்திருக்கும். இங்குள்ள மக்கள் சிவபெருமானிடம் பக்திகொண்டவர்களாதலால் இவர்கள் மேனியெல்லாம் திருநீற்றின் ஒளி வீசிக்கொண்டிருக்கும்.

பெருமிழலைக் குறும்பர் என்பவர் இந்நகரின் தலைவர் ஆவர். இவர் சிவபெருமானை வழிபடும் நெறியினர். சிவனடியார்களிடம் இவர் பேரன்பு கொண்டிருந்தார். அவர்கள் குறிப்பறிந்து வேண்டியன கொடுத்து உதவி வருவார். அவர்களைப் பசி தீரப் புசிக்க வைத்து அதில் பெருமகிழ்ச்சி கொள்வார்.

இவர் வாழ்ந்த காலத்திலேதான் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகையைப் பாடினார். பெருமிழலைக் குறும்பர் சுந்தரமூர்த்தி சுவாமிகளிடம் பேரன்பைக் கொண்டிருந்தார். அவரையே நெஞ்சத்தில் நினைத்து வழிபட்டு வந்தார். இதன் பயனால் இவருக்கு அஷ்டசித்திகளும் கைகூடின. தூய்மையான

அன்புணர்வில் மேலும் மேலும் தோயப் பெற்ற இவர் இடையறாது அஞ்செழுத்தை ஓதி யோகப் பயிற்சியில் முதிர்ச்சிபெற்று விளங்கினார்.

திருவஞ்சைக் களத்தில் தங்கியிருந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள், அங்கு எழுந்தருளியுள்ள இறைவரைத் தொழுது திருப்பதிகம் பாடினார். தமக்கு வடகயிலை வாழ்வைத் தர இறைவனார் திருவுள்ளம் கொண்டிருப் பதை அவர் உணர்ந்தார்.

யோகத்தில் ஈடுபட்டுத் தம் குருநாதர் சுந்தரர் திருவடிகளை நினைந்து வணங்கிக் கொண்டிருந்த பெருமிழலைக் குறும்பருக்கு, சுந்தரர்பெருமான் கயிலை செல்ல இருப்பதை உணர்ந்துகொள்ள முடிந்தது. 'என் நெஞ்சகத்தே கோயில் கொண்ட என் குருநாதர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் கயிலை செல்ல, அடியேன் அவரைப் பிரிந்து வாழ்வேனா? மணி இழந்த கண்ணால் பெறுகின்ற பயன்தான் என்ன?' என்று மனத்துள் எண்ணியவராய், பெருமிழலைக் குறும்பர் யோகத்தில் மூழ்கி ஒளிவடிவில் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு முன்னர் வடகயிலை அடைந்தார்.

அடியார்கள் நினைத்ததைப் பெறுவார்கள் என்பதை இவ் வரலாறு விளக்குவதை அறிகிறோ மல்லவா?

3. நாயகன் வணங்கிய நாயகி

காரைக்கால் சோழ நாட்டிலுள்ள சிறந்த துறை முகப்பட்டினம். வளங்கள் நிறைந்தது. இப்பட்டினத் திலுள்ள வணிகர்கள் நேர்மை தவறாதவர்கள். வாணிகத் துறைக்குக் களங்கம் வராது காத்து வாழ்க்கை நடத்தியவர்கள். இவர்களுக்குத் தலைவராக விளங் கினார் தனதத்தர். இவருக்குக் திருமகளைப் போல் ஒரு மகள் பிறந்தாள். இக்குழந்தைக்குப் புனிதவதியார் என்னும் இனிய பெயரைச்சூட்டி பெற்றோர் மகிழ்ச்சி கொண்டனர்.

குழந்தைப் பருவம்

குழந்தைப் பருவத்திலேயே புனிதவதியார் பிறை சூடிய பெருமானிடம் பற்றுக் கொண்டிருந்தார். மகள் வளர்ந்துவரும் பருவத்திற்கேற்பத் தந்தை தனதத்தர், அவ்வக் காலங்களில் செய்ய வேண்டிய சிறப்புகள் அனைத்தையும் செய்து வந்தார்.

விளையாடும் போதிலெல்லாம் சிவநாமத்தையே உச்சரித்து விளையாடுவார் புனிதவதியார். திருத் தொண்டர்களைக் கண்டால் அவர்களை வணங்கி

வழிபடுவார். இவ்வாறு நாட்கள் கழிந்து செல்ல, புனிதவதியார் மங்கைப் பருவத்தை அடைந்தார்.

திருமணம்

பெண்மைக்குரிய சிறப்பெல்லாம் பெற்ற இந்த அம்மையாரை மணம் பேச நாகைப்பட்டினத்திலுள்ள நிதிபதி என்பவர், தக்க பெரியோர்களை அனுப்பி வைத்தார். அவர்கள் தனத்தரைக் கண்டு ''நீர் பெற்றுள்ள அழகு மங்கையை நிதிபதியின் புதல்வனான பரமதத்தனுக்கு மணம் செய்து தரவேண்டும்'' என வேண்டிக் கொண்டார்கள்.

தனதத்தரும் இதற்கு மனம் மகிழ்ந்து இசைவு தெரிவித்தார். பெரியோர்கள் அதை நிதிபதியிடம் அறிவிக்கவே அவரும் திருமணத்திற்குரிய செயல்களை விரைந்து செய்யத் தொடங்கினார். ''பெண் வீட்டாருக்கும், உறவினர்களுக்கும் ஏனைய நண்பர் களுக்கும் நிதிபதி திருமண நாளைக் குறிப்பிட்டுத் திருமுகம் எழுதியனுப்பினார். தனதத்தர் அந்நாளில் தம் இல்லத்தை அழகுபடுத்தி, திருமணப் பந்தல் அமைத்து முளைப்பாலிகை முதலியனவும் உண்டாக்கி வைத்தார்.

நிதிபதி, மணமகனுக்குத் திருமணக் கோலம் எழிலுறச் செய்து, மணமகள் இல்லம் நோக்கி அழைத்துச் சென்றார். தனதத்தர் மணமகனையும் மற்ற வர்களையும் அன்போடும் சிறப்போடும் வரவேற்று, தம் அன்புத் திருமகளைப் பரமதத்தனுக்கு மணம் செய்து கொடுத்தார்.

இல்லற வாழ்வில்

திருமணம் ஆனபின்னர் தனதத்தர் மணமக்களை நாகைக்கு அனுப்பாமல் அவர்களைத் தம்முடனேயே இருக்கக் கேட்டுக் கொண்டார். அவருக்கு ஒரே புதல்வியல்லவா புனிதவதியார்! அவர், மணமக்கள் குடியிருக்க இல்லம் அமைத்து, வேண்டிய செல்வங் களையும் வழங்கினார்.

பரமதத்தனும் தன் அன்பு மனைவியிடம் அளவிலாக் காதல் கொண்டு மனைவாழ்வு நடத்தி வந்தான். அவ்வாழ்வு வளம் பெற்றமைய வணிகத் துறையில் ஈடுபட்டு வளர்ச்சியுற்றான்.

புனிதவதியார் செஞ்சடைச் சிவனாரிடம் சிந்தை கொண்டவராய் இல்லறத்தை இனிது நடத்தி வந்தார். சைவத்தில் தோய்ந்த மெய்யடியார்களுக்கு இனிய உணவளித்தலும் உடைகள் கொடுத்தலும் பிறபொருள் களைத் தருதலும் அவரது நித்தியப் பணிகளாய் இருந்தன.

மாங்கனி இரண்டு பெறுதல்

இவ்வாறு இவர்கள் இல்லறம் நடத்தி வருகின்ற நாளில் பரமதத்தனிடம், அலுவலின் பொருட்டு வந்தவர்கள் அவனுக்கு இரண்டு மாங்கனிகளைக் கொடுத்தனர். அதை அவன் தனது மாளிகைக்கு அனுப்பி வைத்தான்.

மாங்கனிகளைப் பெற்ற புனிதவதியார், வீட்டில் அவற்றை வைக்க வேண்டிய இடத்தில் பாதுகாப்பாக

வைத்துக் கொண்டார். இச்சமயம் சிவனடியார் ஒருவர் பசியோடு அவ்வீட்டுக்கு வந்தார். அவரைக் கண்ட புனிதவதியார், அவரது பசியைத் தீர்க்கும் எண்ணத்தினராய் அவருக்குக் கைகால் கழுவ நீரைக் கொடுத்தார். பின்னர் அவரை அமரச் செய்து, பாத்திரத்தில் அவருக்குத் திருவமுது படைத்தார். கறியமுது அதுவரையிலும் சமைக்கப்படாததால் கணவன் கொடுத்தனுப்பிய மாங்கனிகளில் ஒன்றை எடுத்து வந்து அவருக்கு உவந்தளித்தார். மிகுந்த பசியும், முதுமையின் தளர்ச்சியும் கொண்ட அந்த அடியார், அந்த அன்னத்தோடு மாங்கனியையும் சுவைத்து உண்டு பசி தீர்ந்து புனிதவதியாரை வாழ்த்திச் சென்றார்.

பகல் நேரத்தில் பரமதத்தன் தன் வணிகத்துறையிலிருந்து உணவுண்ண வீட்டுக்கு வந்தான். நீராடி முடிந்த பின்னர் அவன் உணவுண்ண வந்து அமர்ந்தான். புனிதவதியார் கருத்தோடும் கனிவோடும் கணவனுக்கு அன்னத்தைக் கறி வர்க்கங்களோடு பரிமாறினார். பின்னர் அவன் அருகே அமர்ந்து உணவை ஊட்டினார். தன் கணவன் கொடுத்தனுப்பிய மாங்கனிகளில் மிகுந்திருந்த ஒன்றைக் கொண்டு வந்து அவனுக்குப் படைத்தார். அக்கனி பரமதத்தனுக்கு மிகுந்த சுவையை அளித்தது. எனவே அவன் மற்றொரு கனியையும் கொண்டு வந்து படைக்கும்படி கூறினான்.

திருவருளால் மாங்கனி

புனிதவதியார் என்ன செய்வார்! ஆனால் கனியைக் கொண்டு வரச் செல்கின்றவர்போல் அறைக்குள்

புகுந்தார். திகைப்பில் ஆழ்ந்தார். செய்வதறியாது தத்தளித்தார். கணவன் அனுப்பிய கனியை அவன் கட்டளையின்றிப் பிறர்க்குப் படைத்தல் கடும்பிழை யென்று கலங்கினார். விடையவர் மென்மலர்த்தாளை உள்ளத்திலெண்ணி அயர்ந்தார். அரனாரருளாலே அவளது கையில் ஒரு மாங்கனி வந்திருந்தது. மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினார் புனிதவதியார். இறைவன் பேரருளை வியந்தவாறே அதைக் கணவனுக்கும் படைத்தார். அக் கனியை உண்ட பரமதத்தன், முன் தந்த கனியினும் அது பன்மடங்கு சுவை மிகுந்திருத்தலை உணர்ந்தான். அவன் தன் மனைவியிடம், "இக்கனி பெருஞ் சுவை கொண்டது. முன் தந்த கனியே அல்ல. இதைப் போன்ற கனியை மூவுலகத்திலும் பெற இயலாது. இது ஏது?" எனக் கேட்டான்.

கணவன் மொழி கேட்டுப் புனிதவதியார் வாடித் தவித்தார். 'இக் கனியைச் சிவன் அருளால் கிடைத்த தெனக் கூறுவதும் சரியல்ல. உண்மையை மறைப்பதும் தக்கதல்ல. கணவன் நேருக்கு ஒரு பெண் அப்படி நடக்கக்கூடாதல்லவா!' என்று தம் மனத்துள் எண்ணிய அவர் கணவனிடம் உண்மையைச் சொல்லுதலே தக்கது எனத் தெளிந்தார். இறைவனை இதயத்தில் எண்ணி நடந்ததை ஒளியாமல் உரைத்தார்.

பரமதத்தனின் குழப்பம்

பரமதத்தன் இதை நம்பவில்லை. அவன் அம்மையாரிடம், "சிவன் அருளா இது! சரி, அப்படியானால் அவனருளால் இன்னுமொரு கனி கொண்டுவா,

பார்க்கலாம்'' என்று கூறினான். கற்புச் செல்வியார் அவ்விடம் விட்டகன்று, ஆண்டவனை நினைத்து, ''இறைவா, இன்னும் ஒரு கனி அருளல் வேண்டும், இல்லாவிட்டால் நான் சொன்ன மொழிகள் பொய்யாகும்'' என்று வேண்டினார். அன்புடையார் வேண்டியவாறு அளிக்கும் ஆண்டவன் அருளால் மீண்டுமொரு கனி அம்மையார் கையில் வந்தது. அம்மையார் அதைக் கணவனிடம் கொண்டுவந்து கொடுத்தார்.

பரமதத்தன் வியப்போடு அதை வாங்கினான். உடனே அது அவன் கையைவிட்டு மறைந்துவிடுகிறது. இதைக் கண்ட பரமதத்தன் மனம் குழப்பம் கொள் கிறது. அவன் அம்மையாரை அடிக்கடி பார்த்துக் கொள்கிறான். 'இவள் சாதாரணப் பெண்ணல்ல தெய்வ அருள் பெற்றவள். இவளை விட்டு விலகுதல் வேண்டும்.' என்று முடிவு செய்கிறான். அம்முடிவை அவன் வெளியிடாது அம்மையாரோடு தொடர்பு இல்லாமல் நாட்களைக் கழித்து வந்தான்.

பரமதத்தன் பயணமும் மறுமணமும்

கொஞ்ச நாட்களுக்குப் பின்னர் பரமதத்தன், ''கடல் கடந்து சென்று வாணிபம் செய்து பொருள் சேர்த்து வருவேன்'' என்று சொல்லவும் அவன் சுற்றத் தினராகிய வணிகர்கள் அவனுக்கு மரக்கலம் ஒன்றை உருவாக்கிக் கொடுத்தார்கள். பரமதத்தன் அம்மரக் கலத்தில் பண்டங்களை ஏற்றிக்கொண்டு சிலரோடு புறப்பட்டுச் சென்றான். அங்கங்கே அவன் வாணிபம் செய்தவாறு பாண்டிய நாட்டிலுள்ள ஒரு துறைமுகப்

பட்டினத்தைச் சென்றடைந்தான். அங்குச் சென்ற அவன், சில நாட்களில் ஒரு வணிகனின் புதல்வியை மறுமணம் செய்துகொண்டு அங்கேயே வாழ்ந்து வரலானான். அவனுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அம்மகவுக்கு அவன் தான் தெய்வமாக எண்ணி வழிபட்டு வரும் தன் முதல் மனைவியின் பெயரைச் சூட்டிச் சீரோங்க வாழ்ந்து வந்தான்.

நாயகன் நாயகியை வணங்குதல்

பரமதத்தன் பாண்டி நாட்டில் வாழ்ந்து வருவதைப் புனிதவதியாரின் சுற்றத்தினர்கள் அறிந்தார்கள். புனிதவதியாரைப் பரமதத்தனிடம் சேர்க்கும் எண்ணத்தோடு அவர்கள் அம்மையாரை ஒரு பல்லக்கில் ஏற்றிப் பரமதத்தன் வாழுகின்ற பட்டினத்தின் பக்கம் சென்றடைந்தார்கள். அங்கிருந்து கொண்டே அவர்கள் தாங்கள் வந்திருப்பதை அவனுக்கு அறிவித்தார்கள்.

இச் செய்தி கேட்ட பரமதத்தன் முதலில் அச்சம் கொண்டான். பின்னர் ஒருவாறு தேறி, தனது மனைவி மகளுடன் புனிதவதியார் தங்கியிருந்த இடத்திற்கு வந்தான். அம்மையாரைக் கண்டு, "நான் உம்முடைய அருளால் இனிது வாழ்கிறேன். இவள் என் மனைவி. இப்பெண் என் மகள். இவளுக்குத் தங்கள் திருப் பெயரையே சூட்டியுள்ளேன்," என்று சொல்லியவாறு மனைவி மகளுடன் தானும் அம்மையார் புனிதத் திருவடியில் வீழ்ந்து வணங்கினான்.

இதைக் கண்ட புனிதவதியார்க்கு அச்சம் ஏற்பட்டது. அவர் தம் சுற்றத்தினர் பக்கமாக வந்து ஒதுங்கி நின்றார். சுற்றத்தினர் பரமதத்தனைப் பார்த்து, "என்ன இது? உன் மனைவியின் காலடியில் நீ இப்படி வீழ்ந்து வணங்குவது தகுமா? ஏன் இவ்வாறு நீ செய்கிறாய்? எனக் கேட்டனர்.

பரமதத்தன் பதிலாக, இவ் வம்மையார் மக்கள் பிறவிகொண்டவரல்லர். தெய்வப் பிறவி; இதை உணர்ந்தே நான் இவரை விட்டுப் பிரிந்து வந்தேன். அப்பால் நான் பெற்ற இந்தக் குழந்தைக்கும் இவரது திருநாமத்தையே சூட்டியிருக்கிறேன். இப்போது அவரை நான் வணங்கிக் கொண்டேன். நீங்களும் இவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கிக்கொள்ளுங்கள்" என்று கூறினான், இதைக் கேட்ட சுற்றத்தினர், 'இது என்ன மாயம்?' என்று திகைத்து நின்றனர்.

பேய் வடிவு பெறுதல்

புனிதவதியார் இறைவனை மனத்தில் நினைந்து, "எம்பெருமானே, இதுவரையிலும் என் கணவருக்காக இந்த அழகு நிரம்பிய பொதி உடலைத் தாங்கி நின்றேன். அவரது எண்ணம் இதுவானால் இனி நான் இந்த உடலை வேண்டேன். உன் மலர்த்தாள் போற்றும் பேய் வடிவை எனக்கு அருளுதல் வேண்டும்" என்று வேண்டிக்கொண்டார்.

அம்மையார் எண்ணம் ஈடேறியது. அவர் ஊனுடம்பை உதறி, என்புடம்பு கொண்டு வானகமும் வையகமும் வணங்கும் பேய் வடிவு பெற்றார். மலர்

மழை பொழிந்தது. வான துந்துபிகள் முழங்கின, தேவரும் முனிவரும் சிவகணங்களும் ஆரவாரித்துக் கூத்தாடினர். சுற்றத்தார்களும் அச்சம் கொண்டவர் களாய் அம்மையாரைத் தொழுது வறிதே திரும்பிச் சென்றனர்.

பாடல் மலர்தல்

பேய் வடிவுகொண்ட அம்மையார் இறைவன் திரு வருளால், அப்போது பெற்ற மெய்ஞ்ஞான உணர்வில் அற்புதத் திருவந்தாதி, திரு இரட்டைமணி மாலை பாடிப் பரமனைத் தொழுதார்.

கயிலை செல்லுதல்

கயிலைமலைக்குச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் இவர் நெஞ்சத்தில் மேலோங்கி எழுந்தது. அந்த அருளுணர்ச்சிப் பெருக்கத்தில் கயிலைமலை நோக்கிச் செல்வாராயினார். வழியில் அவரைக் கண்ட வர்கள் அஞ்சி ஓடினார்கள். 'பேய்பேய்' என்று பதறி அலறினார்கள். அம்மையார்-காரைக்கால் அம்மை யாரோ, "என்னை எம்பெருமான் அறிவார். அறியாத இந்த மக்கள் இவ்வாறு பேசுவதால் என்ன குறைநேரப் போகிறது?" என்று எண்ணியவராய்த் தமது பயணத்தில் விரைவு கொண்டார். வடநாடு தாண்டி, இறையனார் வாழும் கயிலைமலையைக் கண்டார். கைகுவித்து வணங்கியவாறு அம்மலைப் பக்கம் வந்தார். அங்கு காலால் நடந்து செல்லுதல் பிழை யென்று கருதித் தலையால் நடந்து சென்றார்.

இவரது வருகையைக் கண்ட உமாதேவியார், வியப்பெய்தியவராய் இறைவரைப் பார்த்து, "தலையினால் இங்கே நடந்து வருகின்ற என்புடலின் அன்புதான் எத்தகையது?" என்றார்.

சிவபிரான் அம்பிகையிடம், "உமையே, இவள் நம்மை வழிபடும் அம்மை. பெருமைமிக்க இவ்வடிவத்தையும் நம்மை வேண்டியே பெற்றாள்," என்று திருவாய் மலர்ந்து அருளினார்.

காரைக்கால் அம்மையார் அவர் அருகில் வந்ததும் "அம்மையே" என அழைத்தார். அம்மையாரும் "அப்பா" என்று அழைத்து ஆண்டவன் திருவடியில் வீழ்ந்து வணங்கினார்.

கயிலாயபதியார் காரைக்கால் அம்மையாரிடம் "நம்மிடம் வேண்டுவது என்ன?" என்று கேட்டார்.

அம்மையார், "எம்பெருமான், எளியேனுக்கு இன்ப அன்பு வேண்டும். பிறவாமை வேண்டும். மீண்டும் பிறப்பு ஏற்படின் உம்மை மறவாத நிலை வேண்டும். எம்பெருமான் நடம் புரியும்போது அடியாள் மகிழ்ந்து ஐயன் திருவடிக்கீழ் இருத்தல் வேண்டும்" என்று வேண்டிக்கொண்டார்.

சிவபெருமான் திருவருள்பொழிந்து, "அம்மையே தென்திசையில் திருவாலங்காடு என்று ஒரு பதி உள்ளது. அங்கு நாம் நடம் செய்கிறோம். அதைக் கண்டு மகிழ்ந்து பாடிக் கொண்டிருப்பாயாக!" என்று அருளினார்.

திருவாலங்காடு செல்லுதல்

அம்மையார் இறைவரைப் பணிந்து, விடை கொண்டு கயிலையைவிட்டுத் திருவாலங்காடு நோக்கித் திரும்பினார். திருவாலங்காட்டின் பக்கம் வந்ததும் மீண்டும் தலையாலேயே நடந்து சென்றார். அத்திருப்பதியை அடைந்ததும் அங்கு ஆண்டவன் புரியும் திருக்கூத்தை கண்டு தொழுதார். 'கொங்கை திரங்கி' 'எட்டடி இலவம்' என்னும் இரண்டு மூத்த திருப்பதிகங்களைப் பாடினார். பின்னர் இறைவனார் திருவடிக்கீழ் என்றும் சிவானந்தம் அனுபவிக்கும் பேற்றினைப் பெற்றார்.

காரைக்கால் அம்மையார் வரலாற்றிலிருந்து இறைவன் தம்மிடம் அன்பும் பக்தியும் கொண்டவர் களின் விருப்பங்களை நிறைவேற்றுவான் என்பதைத் தெரிந்து கொள்கிறோம்.

4. அருந்துயரிலும் அடியார்க்கு அமுது செய்ய முனைந்தவர்

வளமிக்க சோழநாட்டில் திங்களூர் என்னும் ஊரில் அந்தணர் குலத்திலே தோன்றியவர் அப்பூதியடிகள். அவர் இழிந்த செயல்களை இதயத்தில் எண்ணாது என்றும் இதமே புரியும் இயல்பினர். இல்லற வாழ்வில் ஈடுபட்டு இருந்தவர். சிவ பிரானிடம் அவர் அடியார்களிடமும் இவர் பெரும் பக்தி கொண்டிருந்தார்.

உணர்வில் தோன்றிய நட்பு

இவர் திருநாவுக்கரசு சுவாமிகளிடம் பேரன்பு கொண்டவர். அவரை நேரில் பார்க்காமலேயே அப்பூதியடிகளிடம் இந்த அன்பு பொங்கிப் பெருக் கெடுத்தது. திருநாவுக்கரசர் மீது கொண்டுள்ள இந்த அன்பின் அடையாளமாக இவர், தம் வீட்டிலுள்ள அளவுக் கருவிகள், பசு, எருமை முதலியவற்றுக்கும் இன்னும் தாம் அமைத்திருந்த திருமடம், தண்ணீர்ப் பந்தல், குளம், சாலை ஆகியவற்றுக்கும் அவர் பெயரையே இட்டு, அப்பெயராலேயே திருத்

தொண்டுகள் செய்து வந்தார். தம் பிள்ளைகளை மூத்த திருநாவுக்கரசு, இளைய திருநாவுக்கரசு என்றே அழைப்பார். இவ்வாறு அப்பூதியடிகளுக்கு எல்லாம் திருநாவுக்கரசு மயமாயின.

இவ்வாறு இவர் வாழ்ந்து வருகின்ற நாளில் திருநாவுக்கரசு நாயனார் திருப்பழனம் என்னும் திருப்பதியை வணங்கிக்கொண்டு, மற்றும் பல திருப்பதிகளைத் தொழும் எண்ணத்தோடு திங்களூர் வழியே வந்தார். அங்கே ஒரு தண்ணீர்ப் பந்தல் அவரது பார்வையில் படுகிறது. கோடையில் இளைப்பாறும் பொருட்டு அங்கே தங்கினார். அங்கு எங்கும் தம் பெயர் எழுதப்பட்டிருப்பதைப் பார்க்கிறார். அவர் அங்கிருந்தவர்களிடம், "இந்தப் பந்தலுக்கு இப் பெயரிட்டவர் யார்?" என்று கேட்கிறார். அவர்கள் திருநாவுக்கரசரிடம் அப்பூதியடிகள் என்பதைத் தெரி வித்து, "இதுமட்டுமல்ல. இன்னும் அவர் சாலைகள், குளங்கள், பொழில்கள் போன்றவைகளைத் திருநாவுக்கரசர் பெயராலேயே அமைத்துள்ளார்" என்பதையும் அறிவித்தார்கள். இதைக் கேட்ட அப்பர் பெருமானுக்கு வியப்பு நிரம்பியது. அவர்களிடம் நாவுக்கரசர் "அவர் எங்கிருக்கிறார்?" என வினவினார்.

அவர்கள், "அப்பூதியடிகள் இவ்வூரில் உள்ளவர் தான். இப்பொழுதுதான் தமது வீட்டுக்குச் சென்றிருக் கிறார். வீடும் மிகுந்த தொலைவில் இல்லை. அருகிலேயே உள்ளது" எனக் கூறினார்கள்.

திருநாவுக்கரசர் பெருமான் அவ்விடத்தைவிட்டு அப்பூதியடிகளார் திருமனை சென்றார். சிவனடியார் ஒருவர் வந்திருப்பதை அறிந்த அப்பூதியடிகள் விரைந்து வந்து, திருநாவுக்கரசரை வணங்கினார். அவரும் அடிகளாரை வணங்கிக்கொண்டார். அடிகளார் திருநாவுக்கரசு நாயனாரிடம், "அருள் வடிவான தாங்கள் என் வீட்டுக்கு எழுந்தருளியது யான் செய்த தவப் பயனேயாகும்" என்று கனிந்த உள்ளத்தோடு இயம்பினார்.

கேள்வியும் பதிலும்

திருநாவுக்கரசர் பெருமான் அவரிடம், "பிறை யணிந்த பெருமானை வணங்கி வருகிறேன். வருகின்ற வழியில் தாங்கள் அமைத்துள்ள தண்ணீர்ப் பந்தலைக் கண்டேன். பிற அறச் செயல்களையும் கேள்விப்பட்டு மகிழ்ந்தேன். தங்களைக் காணலாம் என வந்தேன்" என்று மொழிந்த அவர் மேலும், "அடியார்களுக்காக நீர் அமைத்துள்ள தண்ணீர்ப் பந்தலில் உமது பெயரை யல்லவா பொறிக்க வேண்டும். அதைவிட்டு வேறொரு பெயரை எழுதியதற்கு என்ன காரணம்?" என்று கேட்டார்.

இவ்வுரை கேட்டதும் அப்பூதியடிகள் மனம் கலங்கியது. "தாங்கள் இவ்வாறு கூறியது தக்கதல்ல. சமணரோடு இணைந்து பல்லவ வேந்தன் செய்துவந்த கொடும் சூழ்ச்சிகள் அனைத்தையும் தம் திருத் தொண்டின் வலிமையால் வென்ற ஒருவர் திருப் பெயரோ வேறொருவருடையது?" என்று சினந்தார். அவர் மேலும், "நம் இறைவருக்குச் செய்யும் திருத் தொண்டினால் இம்மையிலும் வாழலாம் என்பதை

என் போன்றவர்களும் தெரிந்து கொள்ளச் செவ்விய நெறியைக் காட்டியவர் திருநாவுக்கரசு சுவாமிகள் அல்லவா! அவரது திருப்பெயரையன்றோ நான் எழுதினேன். அதனை உணர்ந்துகொள்ளாது தாங்கள் வெம்மொழி உரைத்தீர்கள்! கருங்கல்லைத் தெப்ப மாகக்கொண்டு கடலைக் கடந்த அவரது திருவருள் பேற்றையும் சிறப்பையும் இவ்வுலகில் அறியாதார் யார்? சிவவேடம் தாங்கிய தாங்கள் சிறப்பில்லாத மொழிகள் கூறி விட்டீர்களே! யார் நீங்கள்! எங்கே உள்ளவர்கள்?'' என்று கேட்டார்.

நேரில் கண்ட பேறு

அப்பூதியடிகளின் மொழிகளைக் கேட்ட திருநாவுக்கரசர், அவரது ஆழமான தூய அன்பை உணர்ந்து "சமணப்படுகுழியிலிருந்து கரையேற, எம் பெருமான் சூலை நோயினைத் தந்து, ஆட்கொண்ட, தெளிந்த உணர்வில்லாத அந்த சிறுமையன் யானேதான்'' என்று பதிலுரைத்தார்.

இம்மொழிகளைக் கேட்டதுமே அப்பூதியடிகளின் இருகரங்களும் தலைமீது குவிந்தன. அன்பு நீரை விழிகள் அருவிநீர்போல் பொழிந்தன. அவரது நா குழறிற்று. மேனியெல்லாம் சிலிர்த்துக் கொள்கிறது. அடிகள் கீழே விழுந்து திருநாவுக்கரசரின் திருவடித் தாமரைகளைப் பற்றிக்கொள்கிறார். திருநாவுக்கரசர் மனம்நெகிழ்ந்து அடிகளை எடுத்தருளினார். அப்பூதியடிகளின் உணர்ச்சிப் பெருக்கை என்னவென்று சொல்வது! மனத்தில் எண்ணி அன்பு சொரிந்த அடியவரைத் தம் கண்ணெதிரே காணுகின்ற-கண்டு

தொழ வாய்த்த பேற்றினை நினைந்து இன்பம் கொள்கின்றார். அந்த இன்ப உணர்வில் ஆடுகிறார்; பாடுகிறார்; அங்குமிங்கும் ஓடுகிறார். இன்னது செய்வதென்றறியாது திகைத்துக் களிக்கின்றார். வீட்டினுள் செல்கிறார். தம் மனைவி மக்களுக்குத் திருநாவுக்கரசர் சுவாமிகள் வந்திருக்கும் செய்தித் தெரிவிக்கிறார். அவர்களை அழைத்து வந்து சுவாமிகளை வணங்குகிறார்.

விருந்துண்ண இசைதல்

அடிகள் திருநாவுக்கரசு சுவாமிகளை இல்லத்தினுள் அழைத்துச் செல்கிறார். தூயவொரு பீடத்தில் நாயனாரை இருக்கவைத்து அவரது திருவடிகளை நீரால் கழுவி, மலரிட்டு வணங்கினார். பின்னர் திருநாவுக்கரசரை அப்பூதியடிகள் தமது மனையில் திருவமுது உண்ணவேண்டுமென வேண்டிக்கொள்கிறார். அப்பர் பெருமானும் அதற்கு இசைகிறார்.

அடிகளும் அவர் மனைவியாரும் மகிழ்ச்சி மிகக் கொண்டனர். ‘சொல்லரசர் பெருமான் நம் இல்லத்தில் விருந்துண்ண இசைந்தது நம் நல்லருளே’ எனக் களிப்புற்றனர். அன்புணர்வில் அறுசுவை உணவுகள் ஆக்கப்பட்டன. தம் மகன் மூத்த திருநாவுக்கரசை அழைத்து சுவாமிகளுக்குத் திருவமுது படைக்க வாழைக்குருத்து இலையை அரிந்துகொண்டு வரக் கூறினார் அப்பூதியடிகள்.

பாம்பு தீண்டுதல்

தமக்கும் தொண்டு செய்யக் கிடைத்த வாய்ப்பினை எண்ணி மகிழ்வுற்ற மைந்தர் குருத்து

இலையை அறிந்து கொண்டுவரத் தோட்டத்திற்குள் சென்றார். பெரிய வாழையின் குருத்து ஒன்றைக் கத்தியால் அரிந்தார். அந்நேரம், அந்தோ! விபரீதம் நடந்து விடுகிறது. ஒரு பாம்பு அவரது கையைத் தீண்டிச் சுற்றிக் கொள்கிறது. மூத்த திருநாவுக்கரசு பாம்பை உதறிக் கீழே வீழ்த்தினார். பதைபதைத்த நெஞ்சமுடன், 'நஞ்சு வேகமுடன் தலைக்கேறி என்னை வீழ்த்தி விடுமுன் நான் விரைந்து சென்று இக் குருத்தைக் கொண்டுபோய்க் கொடுப்பேன். நடந்த நிகழ்ச்சியை எவரிடமும் சொல்லேன். இதனால் சுவாமிகள் திருவமுது கொள்ளுதல் தடைபட்டுப் போகும்' என்று எண்ணியவாறு ஓடோடி வந்து குருத்தை அன்னையாரிடம் கொடுத்தார் மைந்தர்.

மூத்த திருநாவுக்கரசின் மேனி கறுத்தது. சொற்கள் குழறின. அவர் அப்படியே மயங்கிக் கீழே விழுந்து விடுகிறார்.

இலையைக் கொண்டு தந்து தரையில் விழுந்த மைந்தனைத் தாய் தந்தையர் நோக்கித் திடுக்கிடுகிறார்கள். உள்ளம் பதை பதைப்புக் கொண்டவர்களாய் மைந்தரைக் கூர்ந்து நோக்கி, பாம்பு தீண்டி அவர் மடிந்ததை உணர்ந்து கொள்கிறார்கள். அளவுகடந்த துயரம் அவர்களைப் பற்றிக் கொள்கிறது. இனி என்ன செய்வது? அவர்கள் தங்கள் நடுக்கத்தையும் வேதனையையும் அடக்கிக் கொள்கின்றனர். 'அடியவர் இந் நிகழ்ச்சியை அறிந்தால் அமுதுசெய்யார். எனவே இதை வெளிக்காட்டிக் கொள்ளக்கூடாது' என்று தமக்குள் முடிவு செய்துகொள்கின்றனர். இவர்களுக்குத் தம்

அருமை மகன் உயிரினும், அடியவர் தொண்டு மேம்பட்டதாயிற்று. என்னே இந்தப் பெருமக்களின் அடியார் பற்று!

மூத்த மைந்தர் எங்கே?

பின்னர் இவர்கள் திருநாவுக்கரசு சுவாமிகள் அருகே சென்று வணங்கி, "எங்கள் குடி முழுதும் உய்யுமாறு திருவமுது செய்ய எழுந்தருள வேண்டும்', என வேண்டிக் கொண்டார்கள். அவரும் கை கால் கழுவி பீடத்தில் வந்தமர்ந்து யாவருக்கும் திருநீறு அளித்தார். இளைய திருநாவுக்கரசுக்குத் திருநீறு அளிக்கும்போது சுவாமிகள், "இவருக்கு மூத்தவர் எங்கே? அவருக்கல்லவா முதலில் அளிக்கவேண்டும்" என்று சொல்லி மூத்த குமாரரை அழைக்கக் கூறினார்.

அப்பூதியடிகள் திகைத்தார். என்றாலும் பரபரப்புக் கொள்ளாது, "அவன் இங்கே இப்போது உதவான்", என்றார். இதைக் கேட்ட அப்பர் பெருமானுக்கு இறைத் திருவருளால் ஏதோ ஒருவிதத் தடுமாற்றம் ஏற்பட்டது. அவர் அடிகளிடம், 'தாங்கள் சொல்வதை என் உள்ளம் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் என்ன செய்தார்? ஏதோ நடைபெற்றிருக்கிறது. உண்மையைச் சொல்லுங்கள்" என்றார்.

அப்பூதியடிகள் நடுக்கம் கொண்டார். 'பெரியவர் அமுது செய்ய இடையூறு ஏற்பட்டு விட்டது. இனி நான் அவரிடம் மறைப்பது கூடாது' என்ற முடிவோடு நடந்ததை அப்பர் பெருமானிடம் அறிவித்தார் அடிகள்.

இறந்தவர் பிழைத்தல்

இச் செய்தி கேட்ட திருநாவுக்கரசு சுவாமிகள் திகைப்படைந்தார். அவர் அடியார்களிடம், "நீ செய்தது நன்றாக இருக்கிறது. யார்தான் இப்படிச் செய்வார்கள்?" என்று கூறியவாறு எழுந்து சென்று மூத்த திருநாவுக்கரசரின் உடலை நோக்கினார். கலக்க முற்றார். அப்பிணத்தைத் திருக்கோயிலின் முன் கொண்டு வரச்செய்து இறைவனை நினைந்தவராய் 'ஒன்று கொலாம்' என்னும் திருப்பதிகம் பாடினார். இறைவன் பேரருளால் அம்மைந்தர் உறக்கத்தினின்றும் எழுந்தவர்போல் எழுந்து தம் குலகுருவாகிய திருநாவுக்கரசர் திருவடிகளில் விழுந்து வணங்கினார். சுவாமிகள் அவரை அழைத்துக்கொண்டு வீடு சென்று அவருக்குத் திருநீறு அளித்தார். பின்னர் இளைய திருநாவுக்கரசருக்கும் திருநீறு கொடுத்து வாழ்த்தினார்.

இனிய விருந்தில் இதயக் களிப்பு

அடிகளாரும் அவரது மனைவியாரும் திருநாவுக் கரசரிடம், "தாங்கள் அமுது செய்ய இவனது நிலை சிறிது இடையூறாயிற்று," என்றார். அவர்களது விருப் பத்தை உணர்ந்த திருநாவுக்கரசர் அமுது கொள்ள அமர்ந்தார். அப்பூதியடிகளைப் பார்த்து அவர், "தாங்களும் புதல்வர்களும் உடனிருந்து உண்ண லாமே" என்றார். அப்பூதியடிகளாரும் அதற்கு இசைந்து, தாமும் தம் புதல்வர்களோடு அப்பர் பெருமானுடன் அமர்ந்து அமுது செய்தார்கள். அப்போது அப்பூதியடிகளுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு ஒரு எல்லையுமுண்டோ?

பின்னர் அடிகளின் வேண்டுகோள்படி திருநாவுக்கரசர் பெருமான் திங்களூரில் சில நாட்கள் தங்கினார். பின்னர் திருப்பழனம் சென்று பதிகம் பாடினார். அப்பதிகத்தில் அவர் அப்பூதியடிகளைச் சிறப்பித்தார். திருநாவுக்கரசர் அடிகளாரிடம் விடைபெற்றுச் சென்ற பின் அடிகள் அப்பர் பெருமானையே நினைந்து திருத் தொண்டுகள் செய்து இறைவன் திருவடி நிழலில் தங்கப் பெற்றார்.

இவ் வரலாற்றிலிருந்து தம் அரிய மைந்தர் உயிரைவிட அடியார் தொண்டில் ஈடுபட்ட அப்பூதி அடிகளார், தமக்கு ஏற்பட்ட இன்னல்கள் எல்லாம் நீங்கி இன்பப் பேறு அடைந்த உண்மையைத் தெரிந்து கொள்கிறோம்.

5. கனவில் கண்டது

சோழநாட்டில் சாத்தமங்கலம் என்னும் பதியில் அந்தணர் மரபில் தோன்றியவர் திருநீலநக்கநாயனார். இவர் சிவபெருமானுக்கும் சிவனடியார்களுக்கும் தொண்டு செய்வதே வேதம் அறிவிக்கும் உண்மை எனத் தேர்ந்து அதன்படி நடந்து வந்தவர்.

அயவந்தி இறைவன் கோயிலில்

இவர் ஒரு திருவாதிரை நாளில் அப்பதியிலுள்ள அயவந்தி கோயிலுக்குச் சென்றார். இவரது மனைவியாரும் இறைவனை வழிபட இவருடன் சென்றார். நாயனார் விதிப்படி ஆண்டவனை வணங்கினார். அவர் மீதுள்ள ஆராத அன்பினால் இவர் சிவலிங்கம் எதிரே அமர்ந்து அஞ்செழுத்தை நெஞ்சம் நெகிழ ஓதிக் கொண்டிருந்தார். அந்நேரம் சிலம்பி ஒன்று மேலேயிருந்து வழுவிச் சிவலிங்கத்தின்மீது விழுந்தது. இதைக் கண்ட நாயனாரின் மனைவியார் பதைபதைப்புக் கொண்டவராய் அதை ஊதி மாற்றினார். அவர் வாய் நீரும் இறைவர் மேல் தெரித்தது. தன் குழந்தையின் மேல் விழும் சிலம்பியை

ஒரு தாய் எவ்வாறு ஊதித்துமிப்பாளோ அவ்வாறிருந்தது நாயனார் மனைவியின் செயல்.

மனைவியார் செயலைக் கண்ட திருநீலநக்க நாயனார் பதைபதைத்தார். விழிகளை மூடிக்கொண்டார். தம் மனைவியாரைப் பார்த்து "அறிவில்லாதவளே, என்ன வேலை செய்தாய்?" என்று கேட்டார்.

"சிலம்பி சிவலிங்கத்தின்மீது விழுந்தது. அதை ஊதி உமிழ்ந்தேன்" என்று அம்மையார் பதிலளித்தார்.

மனைவியாரை விட்டு நீங்குதல்

நாயனார் மனைவியின் செயலைத் தவறு என்று கருதினார். ஆனால் அவர், தம் மனைவியார் உள்ளத்தில் ஊற்றெடுத்துச் சுரந்த தூய அன்பையும் ஆர்வத்தையும் எண்ணிப் பார்க்கவில்லை. அவர் மனைவியாரிடம், "இதை வேறு வகையில் போக்கியிருக்கலாமே. உன் வாய் நீரையா இறைவர்மீது உமிழ்வது? தகாத செயல் செய்தாய். எனவே நான் உன்னைத் துறந்தேன்" என்றார்.

அப்பொழுது சாயங்காலம் ஆயிற்று. அங்கு நேர்ந்த குறையை நீக்கிக்கொள்ள நாயனார் வழிபாடு செய்து முடித்தார். பின்னர் மனைவியைத் திருக்கோயிலில் விட்டு விட்டுத் தாம் மட்டும் வீடுபோய்ச் சேர்ந்தார். கணவர் மனநிலையை உணர்ந்த அம்மையார், வீடு செல்ல அஞ்சியவராய் அன்றிரவு முழுவதும் திருக்கோயிலிலேயே தங்கினார்.

கனவில் திருக்காட்சி

அன்றிரவு அயவந்திநாதர் நாயனார் கனவில் தோன்றி, "உன் மனைவி தூய அன்போடு ஊதி உமிழ்ந்த இந்த இடத்தில் கொப்புளம் இல்லை. அவள் ஊதாத இடத்தில் எழும்பியுள்ள பொப்புளத்தைப் பார்" என்று காட்டினார்.

கனவைக் கண்ட நாயனாருக்கு விழிப்பு ஏற்படு கிறது. இறைவன் திருவருளை எண்ணி இன்ப உணர்வைக் கொள்கிறார். ஆடிப் பாடுகிறார்; ஆனந்த உணர்வில் திளைக்கிறார்.

காலை புலர்கிறது. திருநீலநக்க நாயனார் திருக் கோயிலுக்கு விரைந்து செல்கிறார். ஆண்டவனைத் தொழுது பரவுகின்றார். அன்பு மனைவியாரை அழைத்துக்கொண்டு வீடு வந்து சேர்கிறார். அவரது திருத்தொண்டுகள் என்றும் போல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

சாதிப் பிரிவைக் களைதல்

அக் காலத்தில் திருஞான சம்பந்தப் பெருமான் அடியார்களுடன் சாத்தமங்கை நோக்கி எழுந்தருள் வதைக் கேள்விப்படுகிறார். அவரது பெருமைகளை ஏற்கனவே அறிந்தவர் திருநீலநக்கர். திருஞான சம்பந்தப் பெருமானைக் கண்டுதொழ வேண்டுமென்று ஆர்வம் அவரிடம் மேலோங்கி எழுகிறது. அடியார்கள் வரும் வழியெல்லாம் அழகு செய்யப் பணிக்கிறார் திருநீலநக்கர். அடியார்களை அவர் எதிர்கொண்டு வணங்கி, அன்பு பெருகும் உள்ளத்தோடு வரவேற்றுக்

கொள்கிறார். திருஞானசம்பந்தப் பெருமானையும் திருநீலகண்டப் பெரும்பாணரையும் மற்றுள்ள அடியார்களையும் தமது இல்லத்துக்கு அழைத்துச் செல்கிறார். அங்கு அவர்களுக்கு இனியசுவை உணவு அளிக்கப்படுகிறது. அன்றிரவு அடியார் பெருமக்களைத் தம் இல்லத்திலேயே தங்கி உணவுண்ணவும் துயில் கொள்ளவும் வேண்டிக் கொள்கிறார். அவர்களும் இதற்கு இசைந்தனர்.

எல்லோரும் அமுதுண்டபின்னர் திருஞான சம்பந்தப் பெருமான் திருநீலநக்க நாயனாரிடம், ''பாணர்க்கும் அவரது மனைவியார்க்கும் இரவில் துயின்று கொள்ள நல்லதோர் இடத்தைப் பார்த்துக் கொடுக்கவேண்டும்'' என்று கூறியருளினார். திருநீல நக்கரும் சம்பந்தப் பெருமான் விருப்பிற்கிசைந்து அவர்களுக்குத் தம் இல்லத்தின் நடுவேயுள்ள வேள்வித் திண்ணையின் அருகே வாய்ப்பாக துயில்வதற்கு இடம் அளித்தார். பாணர்கள் அக்காலத்தில் தாழ்ந்த குலத்தின ராக மதிக்கப்பட்டிருந்தார்கள். இதைப் பொருட் படுத்தாது தம் இல்லத்தின் நடுவே புனிதமான இடத்தைக் கொடுத்த திருநீலநக்கரின் உன்னத உள்ளத்தைப் பாராட்ட வேண்டும்! பாணர்பெருமான் தம் துணைவியோடு அங்கே துயில் கொண்டார்.

திருஞானசம்பந்தரிடம் பேரன்பு

மறுநாள் காலையில் அயவந்திக்குத் திரும்பினார். அங்குப் பாடிய திருப்பதிகத்தில் திருநீலநக்க நாயனாரைச் சிறப்பித்தார். திருஞானசம்பந்தப் பெருமான் சில நாட்கள் அங்குத் தங்கியிருந்து பின்னர்

நாயனாரிடம் விடைபெற்று வேறு இடங்களுக்குச் செல்லலானார். ஆனால் ஞானசம்பந்தரிடம் பேரன்பு கொண்டிருந்த திருநீலநக்க நாயனாரால் அவரைப் பிரிந்திருக்க முடியவில்லை என்றாலும் திருஞான சம்பந்தர் சொல்லியவாறு அவர் சாத்தமங்கையிலேயே தங்கியிருந்தார். இருப்பினும் அவர் நெஞ்சம் ஞான சம்பந்தப் பெருமானையே நாடிக் கொண்டிருந்தது. இடையிடையே சம்பந்தப் பெருமான் செல்லும் திருப்பதிகளுக்குத் தாமும் சென்று, அவரைக் கண்ணாரக் கண்டு வணங்கிக் களிகொண்டு திரும்புவார்.

இவ்வாறு தம் நாட்களைக் கழித்து வந்த திருநீல நக்கநாயனார் சம்பந்தர் பெருமானுக்குத் திருநல்லூரில் திருமணம் நிகழ்ந்தபோது கூடவே இருந்து தொழுது வழிபட்டார். பின்னர் அங்குத் தோன்றிய பேரொளியில் தாமும் கலந்து சிவபெருமான் திருவடி நீழலை அடைந்தார்.

அருளாளர்களில் ஒருவருக்கு மற்றவரிடம் தோன்றும் அன்பு எல்லையற்றதென்பதும் அவர்கள் இரண்டறக் கலந்து இனியபேறு பெறும் இயல்புடை யவர்கள் என்பதும் திருநீலநக்கநாயனார் வரலாற்றி லிருந்து நாம் தெரிந்து கொள்கிறோம்.

6. நீரால் திருவிளக்கு எரித்தவர்

சிவபெருமானிடம் சிந்தை வைத்துக் தொண்டு செய்பவருக்கு ஆகாத செயல் எதுவுமில்லை என்பதற்கு நமிநந்தியடிகள் நாயனார் வரலாறு தக்க சான்றாக விளங்கும். எரியும் விளக்கில் நீர் விழுந்தால் தீபம் அணைந்துவிடுவது இயற்கை. ஆனால் நமிநந்தியடிகள் நீரை ஊற்றித் தீபம் ஏற்றி விளக்கையே எரிய வைத்திருக்கிறார். இது வியப்பாக இருக்கிறதல்லவா! ஆம். ஆனால் இது இறைவனின் திருவருளால் நமிநந்தியடிகளுக்கு வாய்த்த பேறு. அவரது சுவையான வரலாறே அடியில் வருவது.

சோழநாட்டில் ஏமப்பேறூர் என்னும் திருநகர் இன்பம் சுரக்கும் எழில்நகர். இங்குள்ள தெருக்கள் அழகு மிக்கன. வீடுகளில் அன்பு நிரம்பியிருக்கும். பொழில்களெல்லாம் குளிர்ச்சி கொண்டிருக்கும். கழனி களில் தாமரை மலர்களும் செங்கழுநீர்ப் பூக்களும் நிறைந்து விழிகளுக்கு விருந்தளிக்கும்.

இத்தகைய சீர்மிக்க நகரத்தில் சைவ அந்தணர் குலத்தில் தோன்றியவர் நமிநந்தியடிகள். இவர் நேரிய

ஒழுக்கம் வாய்ந்தவர். திருநீற்றுச் செல்வத்தையே சிதைவு போக்கும் செல்வம் என்று உணர்ந்தவர், என்றும் இவர் சிவபெருமானை நினைந்து வழி படுவார். நாள்தோறும் அருகேயுள்ள திருவாரூர் சென்று சிவபெருமானை வழிபட்டு வருவது இவரது வழக்கமாக இருந்தது.

சமணர் இகழ்ந்துரை

ஒருநாள் நமிநந்தியடிகள் திருவாரூர் புற்றிடங் கொண்ட பெருமானை வழிபட்டுவிட்டு, அருகேயுள்ள அருள்நெறி என்னும் திருக்கோயிலுக்குச் சென்றார். அங்குள்ள இறைவரை வணங்கித் திருத்தொண்டுகள் செய்தார். சாயுங்காலம் ஆகி விளக்கேற்றும் நேரம் வந்தது. நமிநந்தியடிகள் அவ்வாலயத்தில் விளக் கேற்றிச் சிவபெருமானை வழிபட விருப்பம் கொண்டார். விளக்குக்கு நெய் வேண்டுமல்லவா! வீட்டுக்குச் சென்று அவர் கொண்டுவருவதாக இருந்தால் நேரம் ஆகிவிடும். எனவே அடிகள் அருகே யிருந்த ஒரு வீட்டினுள் சென்றார். அங்குள்ளவர்களிடம் விளக்கேற்ற நெய் கேட்டார். அந்த வீட்டிலுள்ளவர்கள் சமணர்கள். அவர்கள் அடிகளைப் பார்த்துச் சிரித்தவர் களாய், "கையிலே கனலுடைய கடவுளுக்கு விளக்கு எதற்கு? இங்கே நெய் இல்லை. நீரைக் கொண்டுபோய் விளக்கேற்றும்" என்றார்கள்.

வான்வழிக் குரல்

சமணர்கள் அளித்த பதில் நமிநந்தியாரை மிகவும் வேதனையில் ஆழ்த்தியது. அப்போது அங்கொரு அதிசயம் நிகழ்ந்தது. வானத்திலிருந்து, "கலக்கம்

வேண்டாம். அருகாமையிலுள்ள குளத்திலிருந்து நீரை எடுத்துவந்து விளக்கேற்று!'' என்று குரல் ஒலித்தது. இதைக்கேட்ட நமிநந்தியடிகள் பெருங் களிப்புற்றார். இறைவன் பேரருளை எண்ணி மெய்சிலிர்ப்புற்றார். அவர் ஐந்தெழுத்தை உச்சரித்தவாறு அருகேயுள்ள குளத்து நீரை முகந்து எடுத்தார். நேராகக் கோயிலுக்குச் சென்றார். அங்குள்ள அகல்விளக்குத் திரியில் நீரை வார்த்துத் தீபம் ஏற்றினார். அது நெய்விளக்கு போல் எரிந்தது. இதைக் கண்டு பரவசமுற்ற அடியார், இறைவன் பேரருளை வியந்து, அக்கோயிலிலுள்ள ஏனைய விளக்குகளையும் நீரை ஊற்றியே ஏற்றினார். இறைவன்பால் தூய அன்புடைய அடியாருக்கு நீரும் நெய்யாயிற்று. நாள்தோறும் நமிநந்தியார் இவ்வாறே செய்து விளக்கேற்றி வந்தார். இதையறிந்த சமணர்கள் வியப்பில் மூழ்கி விட்டனர்.

சோழன் ஏற்பாடு

இவ்வாறு நடந்துவரும் நாளில் சோழ மன்னன் சமண நெறியை விட்டுச் சைவ நெறியை மேற் கொண்டான். அரசன் எவ்வழி அவ்வழியன்றோ குடிகள்! நாட்டு மக்கள் அனைவரும் சைவராயினர்.

சோழ மன்னன் நமிநந்தியடிகளின் அருள் செயலையும் திருத்தொண்டுகளையும் கண்டு மகிழ்ந்து, அவரைத் தலைவராக அமர்த்தி சைவத்தை வளர்க்க முனைந்தான். கோயில்களில் நடக்க வேண்டிய விழாக் களும், பிற சிறப்புக்களும் குறைவின்றி நடக்க, வேண்டிய வழிதுறைகள் அமைத்துக் கொடுத்தான். பிறகு கேட்க வேண்டுமா சைவம் தழைக்க!

நமிநந்தியடிகள் சைவநெறி முறைப்படி வழிபாடு களையும் விழாக்களையும் நடத்தி வந்தார். திருவாரூர் வீதிவிடங்கப் பெருமானின் திருவிழாக்கள் சிறப் போடும் ஒழுங்கோடும் அவரால் நடத்தப்பட்டு வந்தன.

எண்ணத்தில் பிழை

ஒருமுறை வீதிவிடங்கப் பெருமானின் திருவிழா நடைபெற்றது. அவ்விழாவில் பெருமான் திருமணலி என்னும் இடத்திற்கு எழுந்தருளினார். இங்கு உயர்வு தாழ்வு பாராமல் எல்லாக் குலத்தினரும் வீதிவிடங்கரை வணங்கி இன்புற்றனர். பெருமானைச் சேவித்த பின்னர், அவர் தமது இல்லம் வந்து வெளித் திண்ணையில் படுத்திருந்தார். அப்போது அவரது மனைவியார் அங்கே வந்து, ''வழிபாடும் வேள்வியும் செய்து முடித்துவிட்டு உணவை உட்கொள்ளாமல் ஏன் இங்கே இப்படி வந்து படுத்துக் கொண்டிருக் கிறீர்கள்?'' என்று கேட்டார்.

அவர் தமது மனைவியாரிடம், ''எம்பெருமான் திருமணலி எழுந்தருளும் காட்சியை வழிபடச் சென்றிருந்தேன். அங்கு எல்லாக் குலத்தவர்களும் சேர்ந்து வழிபட்டனர். ஆகவே நீராடி சுத்தி செய்து கொள்ளாது எம்பெருமானை வழிபாடு செய்துகொள்ள முடியாது. குளிப்பதற்கு இப்போது நீர் கொண்டு வா'' என்று கூறினார்.

மனைவியாரும் அவ்வாறு செய்வதாகச் சொல்லி அகன்றார்.

கனவில் கேட்டது

மனைவியார் சென்றதும் படுத்திருந்த நமிநந்தி யாருக்குச் சிறிது தூக்கம் வரவே அப்படியே தூங்கி விட்டார். அப்போது அவர் கனவில் சிவபெருமான் அடியார்போலத் தோன்றி, "அந்தணரே, திருவாரூரில் பிறந்தவர்கள் அனைவரும் எமது கணங்களே ஆவர். அக்காட்சியை நாளை நீர் அங்கே காணலாம்" எனக் கூறி மறைந்தார்.

நமிநந்தியடிகள் திடுக்கிட்டு விழித்தார். நடுக்கம் கொண்டவராக, "ஐயோ, நான் பிழை செய்தேனே" என்று தம் முடிவை மாற்றிக் குளிக்காமலேயே சிவவழி பாட்டை முடித்து உணவு உட்கொண்டார்.

இறைவன் திருவருள்

அடுத்தநாள் காலையில் திருவாரூர் சென்றபோது அங்க அவர் கண்ட காட்சி அவரைப் பேரானந்தப் பெருங்கடலில் மூழ்க வைத்தது. அங்குள்ளார் அனை வரும் சிவ வடிவமாகவே காணப்பட்டனர். நமி நந்தியார் சிரம் மேல் கரம் குவித்து அவர்கள் முன்னே விழுந்து தொழுதார். சற்று நேரத்துக்கெல்லாம் அத் தோற்றம் மாறி அவர்கள் தங்கள் உண்மை நிலை யிலேயே விளங்கினர். சிவபெருமான் அருள் திறத்தை எண்ணிச் சிந்தை உருகினார் நமிநந்தியார். அவர் அஞ்சிய நெஞ்சமோடு ஆண்டவனை நோக்கி, "அடியேன் அறியாது செய்த பிழையைப் பொறுத் தருள வேண்டும்" என வேண்டினார். பின்னர் திருவாருருக்கே வந்து குடியேறினார். அங்கிருந்து

என்றும்போல் இறைத் தொண்டுகள் செய்து இறைவன் திருவடி நீழலைச் சேர்ந்தார்.

நமிநந்தியார் வரலாற்றிலிருந்து, அடியார்களது தூய விருப்பத்துக்கு இறைவன் அருள் பாலிப்பான் என்பதையும் இறைவன் படைத்த மக்களுக்குள்ளே எவ்வித உயர்வு தாழ்வு இல்லையென்பதையும் அறிந்து கொள்கிறோம்.

7. சிவஞானப் பால் உண்டவர்

சோழ நாட்டில் சிறப்பு மிக்க திருநகர் சீர்காழி, இது பன்னிரு பெயர்கள் கொண்டது. செழுமையும் திருவழகும் நிரம்பியது.

இத்திரு நகரில் அந்தணர் குலத்தில் கவுணியர் மரபில் தோன்றியவர் சிவபாதவிருதயர் என்பவர். இவர் சிவபெருமான் திருவடியைச் சிந்தையில் நினைத்து வழிபட்டு வருபவர். இவரது மனைவியார் நற்குணங்கள் அனைத்தும் ஒருங்கே நிரம்பிய பகவதியார் என்னும் அம்மையார். இப் பெருமக்கள் செய்த தவத்தாலும், சீர்காழித் தோணியப்பர் திருவருளாலும் இவர்களுக்கு நல்ல நேரத்தில், சைவத் திருச்சமயம் தழைக்கவும், திருநீற்றின் ஒளி சிறக்கவும் பிள்ளையார் பிறந்தருளினார்.

குழந்தைப் பருவத்தில்

இவ்வுலகிற்குப் பெரும் பேறாக வந்து அவதரித்த ஆளுடைய பிள்ளையாரைத் தாலாட்டிப் பாராட்டி வளர்த்தார்கள். காப்பாக இவருக்குத் திருநீற்றை அணிந்து ஒளி செய்தார்கள். பிற்காலத்தில் சிறந்த

அற்புதங்களைச் செய்யப் போவதின் அறிகுறிகள் குழந்தைப் பருவத்திலேயே அவரிடம் தென்பட்டன. பெற்றோரும் மற்றோரும் கண்டு பேரானந்தம் கொள்ள முகமலர் விரித்தும், புன்னகை ஒளி வீசியும் தத்தடியிட்டும் தளர்நடை பயின்றும், மழலை மொழிந்தும், மணித்தேர் உருட்டியும் வளர்ந்து மூன்றாண்டுப் பருவத்தைப் பெற்றார்.

தடாகக் கரையில்

ஒருநாள் சிவபாதவிருதயர் நீராடப் புறப்பட்டார். அப்போது பிள்ளையாரும் அழுதவாறு வாயில் வரை தந்தையாரைப் பின்தொடர்ந்து வந்தார். தந்தையார் இவரைத் தடுத்து நிறுத்த வேண்டிக் கோபம் கொண்டவர்போல் தம்மைக் காட்டி விலக்கினார். பிள்ளையார் கேட்கவேண்டுமே! தம் கிண்கிணி அணிந்த பாதங்களால் நிலத்தைத் தாக்கித் தாமும் உடன் வருவாதய்க் கெஞ்சி வேண்டினார். சிவபாத விருதயர் இதைப் புரிந்துகொண்டு, ''உன் செய்கை இதுவானால் நீயும் என்னுடன் வா'' என்று பிள்ளை யாரையும் அழைத்துக்கொண்டு தோணியப்பர் கோயிலின் அருகேயுள்ள தடாகத்துக்குச் சென்றார்.

தடாகக் கரையில் பிள்ளையாரை நிற்கவைத்து, நீரில் இறங்கிய தந்தையார், பிள்ளையின் தனிமையை நினைந்து மனம் குழம்பினார். பின்னர் திருத் தோணியப்பரை எண்ணி நீராடி, நியமங்கள் செய்து மறுபடியும் நீரில் மூழ்கினார். பிள்ளையார் தந்தை யாரைக் காணாது கலங்கினார். அன்பு பெருகவும், ஆடும் பெருமான் திருவடிஉணர்வு நிரம்பவும் அழத்

தொடங்கினார். கண்கள் நீரைச் சுரந்தன; உதடுகள் துடித்தன; கையைப் பிசைந்தார். சிவபாதவிருதயர் மூழ்கிய இடத்தோடு வேறிடங்களையும் பார்த்து அழுத பிள்ளையார், திருத்தோணியப்பர் திருக்கோயில் சிகரத்தைப் பார்த்து, "அம்மே, அப்பா" என அழைத்து அழுதார்.

சிவஞானப் பால் உண்ணுதல்

இந்த அழைப்பைக் கேட்டு இறைவர் மனக்கனிவு கொள்ளாதிருப்பாரோ? பிள்ளையாருக்குத் திருவருள் செய்யும்பொருட்டுச் சிவபெருமான் உமா தேவியாரோடு அந்தப் பொய்கைக் கரையில் எழுந்தருளினார். பிள்ளையார் ஒருமைகொண்ட மனத்தால் தம் தொண்டினைச் செய்யும் பொருட்டுப் பெருமானார் உமையம்மையாரிடம் அவருக்குச் சிவஞானப் பாலமுதத்தைப் பொற்கிண்ணத்தில் சுரந்து ஊட்டக் கூறினார். அம்மையாரும் பிள்ளையார் அருகே சென்று சிவஞானம் கலந்த பாலை ஊட்டினார். சிவபெருமானார் பிள்ளையார் கண்ணீரைத் துடைத்து, அழுகையை நிறுத்திப் பொற்கிண்ணத்தை அவரிடம் கொடுத்துத் திருவருள் செய்தார்.

இறைவரால் ஆட்கொள்ளப்பட்டதால் ஆளுடைய பிள்ளையாரானார். பாலில் கலக்கப்பட்ட சிவ ஞானத்தை உண்டதால் திருஞான சம்பந்தரானார். இதிலிருந்து ஆளுடையபிள்ளையார் எல்லா ஞானத்தை யும் பெற்றுத் தெய்வத் திருவருள் கொண்டவரானார்.

இறைவரைக் காட்டுதல்

சற்று நேரத்தில் சிவபாதவிருதயரும் தமது பணிகளை முடித்துக் கரையேறினார். அங்குப் பேருணர்வில் மூழ்கி நிற்கும் பிள்ளையாரைப் பார்க்கிறார். அவர் கையில் பொற்கிண்ணம் இருந்தது. வாயில் பாலமுதம் உண்ட அடையாளம் தெரிந்தது. இதைக் கண்ட சிவபாதவிருதயர் சினம் கொண்டவராக, "நீ யார் தந்த எச்சில் பாலமுதை உண்டாய்? அவரை எனக்குக் காட்டு" என்று கையில் ஒரு கோலெடுத்து ஓங்கவும், பிள்ளையார் ஆனந்தக் கண்ணீர் துளித்து, தமது கை விரலைத் தலைக்குமேல் தூக்கி, வானிலே விடையின் மேல் உமாதேவியாரோடு வீற்றிருந்த சிவபெருமானைச் சுட்டிக் காட்டி, தாம் பெற்ற ஞானத் திருவருளால் "தோடுடைய செவியன்" என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடி எம்மை இவ்வாறு திருவருள் செய்த, "பெம்மான் இவனன்றே" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

இப் பதிகம் பாடி முடித்ததும் தேவர்கள் வானில் ஆரவாரித்துக் கற்பக மலர் சொரிந்தனர். தெய்வ வானிசைக் கருவிகள் முழங்கின. சிவகண நாதர்கள் துதித்தனர்.

வானில் தோன்றிய சிவபெருமான் தம் கணங்கள் சூழத் தோணிபுரம் திருக்கோயில் செல்லவும் அவரையே கண்டு நின்ற திருஞானசம்பந்தப் பெருமானும் அவரைத் தொடர்ந்து திருக்கோயில் சென்று நுழைந்தார்.

சிவபாதவிருதயரின் கையிலிருந்த கோல் தானே நழுவி விழுந்தது. உணர்ச்சிப் பெருக்கில் அவர் ஆனந்தக் கூத்தாடினார். அங்கு நிகழ்ந்த அற்புதத்தையும் தோணியப்பரின் திருவருளையும் உணர்ந்து கொண்ட அவர், திருஞானசம்பந்தப் பிள்ளையாரைத் தொடர்ந்து சென்றார். இந்த அதிசய நிகழ்ச்சியைக் கேட்ட அங்குள்ள அந்தணர்களும் மற்றவர்களும் தோணியப்பர் கோயிலின் முன்னே வந்து சூழ்ந்தனர். திருஞான சம்பந்தப் பிள்ளையார் இறைவரை வணங்கி வெளியே வந்ததும் மறை யவர்கள் அவரை வாழ்த்திப் புகழ்ந்தார்கள். சீர்காழி திருப்பதி செய்த தவமே என ஏத்தி வியந்தார்கள்.

ஆனந்தப் பெருக்கில் சிவபாதவிருதயர் முன்னே சென்று பிள்ளையாரை எடுத்துத் தம் தோள்மீது வைத்துக்கொண்டு செல்லலானார். மாமறையோரும் தொண்டர்களும் ஆரவாரித்தனர். மறைகள் முழங்கின. பெண்கள் வண்ண மலர்களும் சுண்ணமும் தூவி வாழ்த்தினர். சிவபாதவிருதயர் பிள்ளையாரோடு வீதி வலம் வந்து தமது இல்லம் சேர்ந்தார்.

திருத்தாளம் பெறுதல்

அன்றிரவு ஆளுடைய பிள்ளையார் தோணியப்பர் திருவடித்தாமரையை மனத்தால் எண்ணி அவர் நினை விலேயே துயில்கொண்டார். மறுநாள் காலையில் எழுந்து திருக்கோயில் சென்று தோணியப்பரையும் உமாதேவியாரையும் தொழுது பின்னர் அங்கிருந்தும் திருக்கோலக்கா சென்றார். அங்கு ஆண்டவரை வணங்கி, தமது திருக்கையாலேயே தாளமாத்திரையை

வரையறுத்து, 'மடையில் வாளை' என்னும் திருப்பதி கத்தைப் பாடினார். அப்போது இறைவர் திருவளால் ஐந்தெழுத்துப் பொறிக்கப் பெற்ற திருத்தாளம் ஒன்று பிள்ளையார் கையில் வந்தது. மகிழ்ச்சி கொண்ட அவர், தாளத்தைத் தம் திருமுடியில் வைத்து வணங் கினார். தாளத்துக்குப் பொருந்த இன்னிசை பதிகத்தைப் பாடினார். பின்னர் சீர்காழியை நோக்கி நடந்தார்.

திருத்தாளத்தோடு ஆளுடைய பிள்ளையார் தம் திருப்பாதம் நோவ நடப்பதைக் கண்ட சிவபாத விருதயர் அவரைத் தம் தோள்மீது எடுத்துக்கொண்டார். பிள்ளையார் திருத்தோணியப்பர் திருக்கோயில் வந்து, இறைவரை வணங்கி வலம் வந்து 'பூவார் கொன்றை' என்னும் திருப்பதிகத்தைப் பாடி, பின்னர் தம் இல்லம் வந்து சேர்ந்தார்.

ஆளுடைய பிள்ளையாரின் அருள் செயலைக் கேள்வியுற்ற அடியார்கள், கூட்டம் கூட்டமாக வந்து இவரைப் பணிந்தனர். பிள்ளையாரின் அன்னையார் பகவதியாரை ஈன்றெடுத்த திருநனிப்பள்ளியிலிருந்து வந்து அன்பர்களது வேண்டுகோள்படி பிள்ளையார் அத்திருப்பதி செல்ல உள்ளம் கொண்டார். தோணியப் பரைத் தொழுது அத்திருப்பதி நோக்கிப் புறப்பட்டார்.

பிள்ளையாரின் சீரடிகள் தரைமீது நடப்பதைக் கண்டார் சிவபாதவிருதயர். பிறர் அத் திருவடிகளை தாங்கவும் அவர் விரும்பினாரில்லை. எனவே பிள்ளை யாரைத் தாமே எடுத்துத் தோள்மீது வைத்து நடந்தார். திருநனிப்பள்ளி நெருங்கி வந்ததும் தந்தையாரிடம்

அவர், "அதோ வானளாவிய சோலை தெரிகிறதே, அப்பதி யாரது?" எனக் கேட்டார். தந்தையார் மகிழ் வோடு "திருநனிப்பள்ளி" எனக் கூறினார். உடனே பிள்ளையார் "காரைகள் கூகை" எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடி அதன் கடைக் காப்பிலே, "திரு நனிப்பள்ளி உள்குவார்தம் பேரிடர் கெடுதற்காணை நமது" சிறப்பித்தருளினார். அங்குச் சென்று கோயில் வலம் வந்து இறைவனை வணங்கிய பிள்ளையார் சில நாட்கள் அங்கு தங்கினார். அவ்வாறு தங்கியிருக்கும் போது தலைச்சங்காடு என்னும் திருப்பதி யிலுள்ளவர்கள் வந்து பிள்ளையாரைத் தங்கள் பதிக்கு எழுந்தருள வேண்டினார்கள். அவர்கள் வேண்டுதலுக் கிசைந்து அத்திருப்பதி சென்று இறைவரைத் தொழுது இன்னிசைப் பதிகம் பாடினார். பின்னர் அங்கிருந்து திருவலம்புரம், பல்லவனீச்சரம், திருச்சாய்க்காடு, திருமுல்லைவாயில் முதலிய திருப்பதிகளுக்குச் சென்று ஆங்காங்கே தேவாரம் ஓதி, சீர்காழி சேர்ந்தார்.

திருநீலகண்ட யாழ்ப்பாணர் வருகை

திருஎருக்கத்தம்புலியூர் வாழ்ந்த திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் பிள்ளையார் பெருமையைக் கேள்விப்பட்டுத் தமது மனைவியாருடன் சீர்காழி வந்து சேர்ந்தார். இவர்கள் வருகையை அறிந்த ஆளுடைய பிள்ளையார் எதிர்கொண்டார். பாணரும் அவரது மனைவியாரும் வள்ளலார் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார்கள். 'தங்கள் வருகையால் நலம் பெற்றேன்' எனப் பிள்ளையார் இன்மொழி கூறி அவர் களைத் தோணியப்பர் திருக்கோயிலுக்கு அழைத்துச்

சென்றார். அங்கு இவர்கள் புறமுன்றில் நின்று இறைவரை வணங்கினார்கள்.

அவ்வேளை பிள்ளையார், யாழ்ப்பாணரிடம் "உமது இறைவருக்கு நீர் யாழ் இசைத்துப் பாடுக" என வேண்டினார். யாழ்ப்பாணர் பாடினியாருடன் யாழை இசைத்து இன்னிசை நாதம் பொழிந்து இறைவரை வணங்கினார். பிள்ளையார் மகிழ்ச்சி கொண்டார். பின்னர் திருஞானசம்பந்தர் யாழ்ப்பாணரை அழைத்துச் சென்று, தங்குவதற்குத் தக்க இடமளித்து உண்டியையும் அளித்தார்.

திருநீலகண்டர் விருப்பமும் திருஞானசம்பந்தர் இசைவும்

திருநீலகண்ட யாழ்ப்பாணர் பிள்ளையார் அருளிய பாக்களிலே இன்புற்று அப் பாக்களின் இசையை யாழிலேயே அமைத்து வாசித்து மகிழ்ந்தார். அவர் சம்பந்தப்பெருமானை வணங்கி, "தங்களுடனேயே இருந்து தாங்கள் அருளும் பதிகங்களை யாழிலிட்டு வாசிக்கும் பேற்றை அடியேனுக்குத் தந்தருள்க!" என வேண்டினார். அதற்கு ஞானசம்பந்தரும் இசைந்தார். அன்றுமுதல் திருநீலகண்டயாழ்ப்பாணர், சீர்காழிப் பிள்ளையாருடன் இருந்து யாழிசைத்துத் திருத்தொண்டு செய்து வந்தார்.

தில்லை செல்லுதல்

இந்நாட்களில் ஆளுடைய பிள்ளையாருக்குத் தில்லையை வணங்க ஆர்வம் எழுந்தது. தம் தந்தை-யாரோடும் திருப்பாணரோடும் அடியார்களோடும்

தோணியப்பரை வணங்கித் தில்லையை நோக்கிச் செல்லுவாராயினர். தில்லையின் எல்லை வந்ததும் தொழுது வணங்கினார். பொன்னம்பலத்தை வலம் செய்து, சிற்சபை சென்று நடனமாடும் பெருமானைக் கண்டு உள்ளம் உருகி கரைந்தார்.

'கற்றாங் கெரியோம்பி' என்னும் திருப்பதிகத்தைத் திருவாய் மலர்ந்தருளினார். பின்னர் வெளியே வந்த ஞான வள்ளலார் தில்லையில் தங்க அஞ்சி, திருவேட்களம் சென்று தங்கினார். அங்கிருந்து தில்லைக்கு வந்து இறைவரை நினைந்து இதயம் குழைந்து பதிகம் பாடி மீண்டும் திருவேட்களம் போய்விடுவார். இவர் பாடும் திருப்பதிகங்களைத் திருநீலகண்டர் யாழில் இசைத்து இன்புற்று வந்தார்.

இவ்வாறு வழிபட்டு வரும் நாளில் ஒருநாள், பிள்ளையார் யாழ்ப்பாணரோடு திருவேட்களத்தி லிருந்து தில்லைக்கு வரும்போது தில்லை மூவாயிரரும் சிவகணநாதராய் விளங்கியதைப் பார்த்தார். தாம் கண்ட இக்காட்சியை அவர் யாழ்ப் பாணருக்கும் காட்டினார். தில்லை அந்தணர்கள் தம்மை வணங்குவதற்கு முன்னாலேயே பிள்ளையார் அவர்களை வணங்கிக் கொண்டார். பின்னர் திருக் கோயிலுக்குள் சென்ற பிள்ளையார், 'ஆடினாய் நறு நெய்யொடு' என்னும் திருப்பதிகத்தை ஓதினார். அதில் தாம் அந்தணரைக் கண்டவிதம் குறித்துப் பாடினார். பின்னர் கோயிலை விட்டுப் புறமே வந்தார்.

திருநீலகண்டர் அழைப்பு

திருப்பாணர் பிள்ளையாரை வணங்கி, "அடிகளே, அடியேன் பிறந்துள்ள திருவெருக்கத்தம்புலியூரையும், அதன் பக்கம் நிவாநதிக்கரையிலுள்ள பல திருப்பதி களையும் வணங்கத் திருவுள்ளம்கொள்ள வேண்டும்" என்று வேண்டிக்கொண்டார். திருஞானசம்பந்தரும் திருப்பாணர் வேண்டுதலுக்கு இசைந்து தந்தையார், அடியார் ஆகியவர்களோடு திருவெருக்கத்தம்புலியூரை அடைந்து இறைவரைத் தொழுதார். பின்னர் திருமுது குன்றம், திருப்பெண்ணாகடம், திருத்தூங்கானை மாடக்கோயில் ஆகிய திருப்பதிகள் சென்று இறை வரைத் தொழுது திருப்பதிகங்கள் பாடினார்.

அங்கிருந்து திருநெல்வாயில் அரத்துறை செல்லத் திருவுளம் கொண்டார். இவ்வேளை பிள்ளையார் தம் தந்தையார் தோளை விட்டிறங்கித் தம் மெல்லிய பாதங்கள் நோவ நடந்தே சென்றார். இறைவரை நினைந்து ஐந்தெழுத்தை ஓதி, மாறன்பாடி என்னும் சிற்றூரை அடைந்தபோது, கதிரவன் காழிப் பிள்ளையார் நடக்கின்ற துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளாதவன் போல் தனது கதிர்களைச் சுருக்கி மேற்றிசை சாய்ந்தான். அன்றிரவு பிள்ளையாரும் ஏனையோரும் அங்கேயே தங்கிக்கொண்டனர்.

முத்துச் சிவிகை-பிற பெறுதல்

திருநெல்வாயில் அரத்துறையில் கோயில் கொண் டுள்ள பெருமான், பிள்ளையார் அடிநோவ நடந்து வரும் துன்பத்தை நீக்கத் திருவுள்ளம் கொண்டார். இறைவர், அடியார்கள் திருக்கோயில் பணியாளர்கள்

ஆகியவர்கள் கனவில் தோன்றி, ''ஞானசம்பந்தன் வருகின்றான். முத்துச் சிவிகையும் முத்துச் சின்னமும் எடுத்துச் சென்று, எம் ஆணையைத் தெரிவித்து அழைத்து வருக'' என அறிவித்தருளினார். பிள்ளையார் கனவிலும் இறைவர் இச் செய்தியை அறிவித்து, ''முத்துச் சிவிகையில் ஏறி வந்து நம் இடங்களை வணங்குக!'' என்றார்.

அடியார்கள் விழித்தெழுந்து ஆலயத்தில் வந்து கூறினர். ஆலயத்திலுள்ளவர்களும் கனவு கண்டு எழுந்தனர். அனைவரும் வியப்பில் தோய்ந்து நின்றனர். அடியவர்கள் திருக்கோயிலில் திருக்காப்பு நீக்கியபோது அங்கே முத்துச்சிவிகையும், முத்துச் சின்னமும், முத்துக் குடையும் காணப்பட்டன. அனைவரும் இன்ப உணர்வில் திளைத்தவர்களாக, மங்கல ஒலிகள் முழங்க, முத்துச் சிவிகை முதலியவற்றைக்கொண்டு அவர்கள் மாறன் பாடிக்குப் புறப்பட்டனர்.

ஆளுடைய பிள்ளையார் தாம் கண்ட கனவைத் தந்தையார்க்கும் ஏனையோர்க்கும் அறிவித்தார். வெண்ணீறு அணிந்து, மந்திரத்தை ஓதி நின்றார். காலைப்போதில் அடியார்கள் சிவநாம முழக்கத்துடன் முத்துச்சிவிகை முதலியவற்றைக் கொண்டு வந்தனர். அவர்கள் ஞானசம்பந்தரை வணங்கி, ''இவை இறைவர் திருவருளால் வந்தவை, ஏற்றுக் கொள்க'' என வேண்டினார்கள். பிள்ளையார், 'எந்தை ஈசன்' என்னும் திருப்பதிகம் பாடி, இறைவரின் இன்னருளை வியந்தார். பின்னர் அருள் நிறைந்த அந்த முத்துச் சிவிகையை வலம் வந்து வணங்கி அதில்

ஏறியருளினார். முத்துக்குடை நிழல் உதவியது. முத்துச் சின்னங்கள் காழிப்பிள்ளையார் வருகைச் சிறப்பை ஒலி செய்தன. அவர் இத்தகைய பெருமைகளோடு திரு நெல்வாயிலை அடைந்து திருவரத்துறை அணுகியதும் முத்துச்சிவிகையை விட்டிறங்கினார். அங்குத் திருக் கோயில் சென்று இறைவரைத் தொழுதார். இப்பதி யிலே சில நாட்கள் தங்கியிருந்தார். இவ்வாறு இருக்கும் நாட்களில் பிள்ளையார் உள்ளத்தில் தோணி யப்பர் நினைவு தோன்றவே அவர் அரத்துறை அடியார் களை வணங்கி விடைபெற்றுப் புறப்பட்டார். வழியில் திருப்பழுவூர், திருவிசயமங்கை, திருவைகா, திரும் புறம்பயம் முதலிய திருப்பதிகளுக்குச் சென்று சிவபிரானை வழிபட்டு, திருச்சேய்ஞலூர் வந்து சேர்ந்தார்.

அங்குள்ள அடியவர்கள் நகரை அழகு செய்து மங்கலப் பொருள்களுடன் பிள்ளையாரை எதிர் கொண்டனர். திருச்சேய்ஞலூர் சண்டேசுரநாயனார் தோன்றிய திருப்பதியாதலால் ஆளுடையபிள்ளையார் முத்துச் சிவிகையினின்றும் இறங்கித் தம்மை எதிர் கொண்ட அடியார்களுடன் காலால் நடந்து சென்றார். திருக்கோயில் சென்று இறைவரைத் தொழுது ‘பீரடைந்த பாலதாட்ட’ என்ற திருப்பதிகம் பாட லானார். இப் பாடலில் சண்டேசுரநாயனார் திருத் தொண்டைச் சிறப்பித்துப் பாடினார். பின்னர் இத்திருப் பதியைவிட்டுப் புறப்பட்டுப் பிள்ளையார் மேலும் பல திருப்பதிகள் சென்று இறைவரை வணங்கி அருள் பதிகங்கள் பாடிச் சீர்காழி நோக்கிப் புறப்பட்டார்.

முத்துச் சிவிகையில் அமர்ந்து சீர்காழிக்குப் பிள்ளையார் வருவதை அறிந்து, அவ்வூர் மக்கள் மகிழ்ச்சிகொண்டு, நகரை அழகு செய்து அவரை எதிர் கொண்டு வரவேற்றனர். சீர்காழி வந்ததும் திருஞான சம்பந்தர், சிவிகையை விட்டிறங்கி, அடியார்களுடன் சென்று தோணியப்பரை வணங்கி வீடு வந்து சேர்ந்தார். பின்னர் திருநீலகண்ட யாழ்ப்பாணருக்கு அவரது இருக்கை செல்ல விடை கொடுத்தனுப்பினார். பிள்ளையாரைப் பெற்ற பகவதியார் அவருக்குத் திருநீற்றுக் காப்பு சாத்தி வணங்கினார். வீட்டில் தங்கிய திருஞானசம்பந்தப் பெருமான் தோணியப்பரை வழிபட்டு அவர் நினைவிலேயே மூழ்கியிருந்தார்.

உபநயனச் சிறப்பு

இவ்வாறு கழியும் நாட்களில் திருஞானசம்பந்தப் பெருமானுக்கு உபநயனம் செய்துகொள்ள வேண்டும் பருவம் வந்தது. அந்தணர்கள் அவரை வேண்டிக் கொள்ள குலமுறைப்படி பூணூல் அணிந்தார். அந்தணர்கள் திருஞானசம்பந்தரிடம், ''இனி நீர் நான்கு மறைகளையும் ஓதும் உரிமை பெற்றீர்'' என்றனர். மறைகள் அனைத்தையும் ஓதாதுணர்ந்த திருவருட் செல்வர், அவ்வந்தணர்கள் வியக்குவண்ணம் ஆயிரம் மறைகளையும் அவற்றுக்குரிய அங்கங்களையும் ஓதிக் காட்டினார். அந்தணர்கள் வியப்புற்று, 'பிள்ளையார் திருவருள் கொண்டு பிறந்தவர்' என்பதை உணர்ந்து அவரைத் தொழுது பணிந்தனர். அந்தணர்களது ஐயங் களைப் பிள்ளையாரே தீர்த்தருளினார். எல்லா மந்திரங் களுக்கும் மூலப்பொருளும் உட்பொருளும் ஐந் தெழுத்தே என்பதை அவர்கள் அறியுமாறு, 'துஞ்சலும்

துஞ்சல்' என்னும் திருப்பதிகத்தைப் பாடியருளினார். அந்தணர்கள் அவர் அறிவித்தவாறே வழிபாட்டைச் செய்து வரலாயினர்.

திருநாவுக்கரசர் வருகை

திருநாவுக்கரசு நாயனார் திருஞானசம்பந்தப் பெருமானின் சிறப்புகளைக் கேள்விப்பட்டிருந்தார். அவருக்கு ஆளுடைய பிள்ளையாரைக் காணவேண்டும் என்னும் ஆர்வம் உள்ளத்தில் மேலோங்கி எழுந்தது. அவர் அடியார்களுடன் சீர்காழியை நோக்கி எழுந் தருளினார். இச்செய்தியை அறிந்த திருஞான சம்பந்தர் அடியவருடன் அவரை எதிர்கொண்டு வரவேற்றார். திருநாவுக்கரசரின் திருத்தோற்றந்தான் என்னே! அவர் நெஞ்சத்திலே விஞ்சி எழுகின்ற அன்பு; தளர்வுற்ற மேனி; திருநீற்றுக் கோலம் தாங்கிய சிவ வடிவு. இவ்வாறு காட்சி அளித்த திருநாவுக்கரசரைக் கண்ட பிள்ளையார் தொழுத நிலையில் எதிர் வந்து, 'அப்பரே' என்றனர். அவரும் 'அடியேன்' என்று தொழுதார்.

இரு ஞானப் பெருமக்களும் கோயில் சென்று தோணியப்பரை வணங்கினார்கள். பிள்ளையார் அப்பரையும் அவருடன் வந்த அடியார்களையும் தமது இல்லத்துக்கு அழைத்துச் சென்று அவர்களுக்குத் திருவமுது அளித்தார். நாவுக்கரசர் சிலநாட்கள் ஞான சம்பந்தர் அன்பில் தோய்ந்து, சீர்காழியில் தங்கி யிருந்தார். பிறகு வேறு திருப்பதிகளை வணங்கும் எண்ணத்தோடு விடைபெற்றுப் புறப்பட்டார். திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசருடன் திருக்கோலக்

காவரை சென்று வழியனுப்பிவிட்டு தம் இல்லம் திரும்பினார்.

திருஞானசம்பந்தருக்கும் தமிழ்நாட்டில் சிவ பிரான்கோயில் கொண்டுள்ள ஏனைய திருப்பதி களுக்குச் சென்று வழிபட வேண்டும் என்ற ஆர்வம் எழுந்தது. ஒரு நாள் தோணியப்பரைத் தொழுது தம் தந்தையாரும் ஏனைய அடியார்களும் பின்தொடர சிவிகையிலேறிப் புறப்பட்டார். மறைகளும் பிற மங்கல வாத்தியங்களும் முழக்கமிட்டு, சிவநேசச் செல்வரின் திருப்பயணத்தைத் தெரிவித்தன. பல திருப்பதிகளைத் தொழுது பாமாலைகள் பாடித் திருப்பாச்சிலாச்சிராமத்தை அடுத்தார்.

கொடுநோய் தீர்த்தல்

இங்குக் கொல்லிமழவன் என்னும் அரசன் தன் புதல்வியின் நோய் தீர்க்க எவ்வளவோ முயற்சிகள் எடுத்தும் பயனின்றிப் போகவே மிக வருத்தத்துடன் இருந்தான். சிவபிரானிடம் இவன் மிகுந்த பக்தி கொண்டவனானதால் கடைசியில் தன் புதல்வியைச் சிவனார் திருச்சந்நிதியில் கொண்டு கிடத்தியிருந்தான். இச் சமயம் திருஞானசம்பந்தப் பெருமான் வரும் செய்தியைக் கேள்விப்படுகிறான். அன்புள்ளத்தோடு அவன் அவரை எதிர்கொண்டு அவர் வீற்றிருந்த சிவிகையின் முன்னே வீழ்ந்து வணங்கினான். ஆளுடைய பிள்ளையார் அவனுக்கு அருள் சுரந்தார். கொல்லி மழவனுடன் திருக்கோயில் சென்ற திருஞான சம்பந்தர், அவன் புதல்வி அங்கு உணர்விழந்த நிலையில் கிடப்பதை கண்டார். அவள் நிலையை

அறிந்த அவர், சிவபெருமானைத் தொழுது, 'மங்கையை வாட மயல் செய்வதோ இவர் மாண்பே' என்ற பதிகத்தைப் பாடலானார். உடனேயே அப் பெண் நோயினின்றும் விடுதலை பெற்று எழுந்தார். தந்தையாகிய கொல்லி மழவனின் மகிழ்ச்சிக்கு ஒரு எல்லையும் உண்டோ? அவன் தன் புதல்வியோடு காழிப் பிள்ளையார் திருவடிகளில் வீழ்ந்து அவரை வணங்கி வாழ்த்தினான். சம்பந்தப் பெருமான் இங்குச் சிலநாட்கள் தங்கியிருந்து இறைவரை வழிபட்டுக் கொண்டிருந்தார்.

குளிர் நீங்குதல்

பின்னர் இவ்வூரை விடுத்து மேலும் பல திருப்பதிகள் தொழுது திருநணா என்னும் பதி சென்றார். அது குளிர்மிகுந்த காலம். குளிரால் மக்கள் அவதியுற்று வந்தனர். அடியார்களுக்கும் இந்நிலையே ஏற்பட்டது. ஞானசம்பந்தப் பெருமானிடம் அடியார்கள் வந்து இக் கொடும் பனிக் குளிரைத் தெரிவிக்கவே அவர் இறைவரைத் தொழுது 'அவ்வினைக் கிவ்வினை' என்னும் திருப்பதிகத்தைத் திருவாய் மலர்ந்தருளினார். எல்லோரும் வியந்து ஆளுடைய பிள்ளையாரை வாழ்த்த, குளிர் அந்த நகரிலிருந்து மட்டுமல்ல, அந் நாட்டைவிட்டே மாறிற்று.

முதுவேனிலும் முத்துப்பந்தரும்

திருவலஞ்சுழி என்னும் பதிக்கு ஆளுடைய பிள்ளையார் வந்த நாளில் முதுவேனில் காலம் தொடக்கமாயிற்று. வெப்பம் மிகுதியால் உயிர்கள் பெற்ற வேதனை அளவிடற்கரியது. ஞானசம்பந்தப்

பெருமான் இப் பதியைவிட்டு மேலும் பல திருப்பதிகள் தொழுது இன்னிசைப் பாமாலைகள் இசைத்தார். திருப்பட்டீசுரம் செல்கின்றபோது வழிப்பாதை மிகவும் வெப்பமுடையதாய் இருந்தது. அப்போது சிவபூதங்கள் வானில் தோன்றி "இது இறைவரால் அருளியது" எனக் கூறி முத்துப்பந்தர் ஒன்றை வானத்தில் விட்டது. ஞானசம்பந்தப் பெருமானுடன் வந்த அடியார்கள் அப்பந்தரின் கால்களைத் தாங்கிக்கொண்டனர். இதுகண்டு வியந்த ஆளுடைய பிள்ளையார் முத்துச்சிவிகையை விட்டுக் கீழிறங்கி இறைவர் பேரருளை நினைந்து நெகிழ்ந்து உருகினார். அவரைத் தொழுது வாழ்த்தினர். திருப் பட்டீசுரம் சென்று அங்குக் கோயில்கொண்ட ஈசரைத் தொழுது பாமாலைகள் பாடினார். மேலும் பல திருப்பதிகள் சென்று இறைவரைத் தொழுது திருவா வடுதுறை வந்து அங்குச் சில நாட்கள் தங்கியிருந்தார்.

பொற்கிழி பெறுதல்

இந் நாட்களில் ஒருநாள் சிவபாதவிருதயர் பிள்ளையாரிடம் வந்து வேள்வி செய்வதற்குப் பணம் வேண்டினார். பிள்ளையார் திருக்கோயில் சென்று இறைவரைத் தொழுது தந்தையாரின் விருப்பத்தைத் தெரிவித்து, 'இடரினும் தளரினும்' என்னும் திருப்பதி கத்தைப் பாடினார். அப்போது அங்கு ஒரு சிவபூதம் தோன்றி, பொற்கிழி ஒன்றை அங்குள்ள பீடத்தில் வைத்து 'இறைவர் இதை உமக்கு அருளினார்' என இயம்பி மறைந்தது. பிள்ளையார் இறைவர் திரு வருளை வியந்து அப் பொற்கிழியை எடுத்துத்

தந்தையாரிடம் கொடுத்தார். அவரும் அதைப் பெற்றுக் கொண்டு சீர்காழி செல்லலானார்.

இதன்பின்னர் காழிப்பிள்ளையார் திருவாவடு துறையைவிட்டுப் புறப்பட்டு, பல திருப்பதிகள் சென்று இறைவரைத் தெரிசித்து, செந்தமிழ்ப் பாடல்கள் இசைத்து, தருமபுரத்தை வந்தணைந்தார்.

யாழ்முரி பாடல்

தருமபுரம், திருநீலகண்ட யாழ்ப்பாணர் அன்னை யார் பிறந்த இடம். அப் பகுதியிலுள்ள பெருமக்கள் காழிப்பிள்ளையாரை எதிர்கொண்டு வரவேற்றனர். யாழ்ப்பாணர் அங்குள்ளாரிடம் பிள்ளையார் அருளிய பதிகங்களை யாழிலிட்டு வாசிக்கும் பேறு தமக்கு வாய்த்ததைக் கூறினார். அவர்கள் மகிழ்ந்து, "நீங்கள் வாசிக்கும் பேற்றைப் பெற்றதால் இத்திருப்பதிக இசை உலகு புகழப் பரவுகிறது" என்றனர். இதைக்கேட்டுப் பொறுக்க இயலாத திருநீலகண்டர் ஞான சம்பந்தப் பெருமானிடம் "இவர்கள் அறியாது கூறினர். யாழ் இசைக்கு அடங்காத இசைப்பதிகத்தைப் பாடியருள வேண்டும்" என வேண்டினார்.

ஆளுடைய பிள்ளையாரும் யாழ்ப்பாணரின் வேண்டுதலுக்கிசைந்து, 'மாதர் மடப்பிடி' என்னும் திருப்பதிகத்தைப் பாடியருளினார். அப் பாடலை யாழிலிட்டு வாசிக்க முனைந்தார் திருநீலகண்டர். ஆனால் அத்திருப்பாடல் யாழ் இசைக்கு அடங்க வில்லை. அஞ்சிய யாழ்ப்பாணர் திருஞானசம்பந்தரை வணங்கி, "தங்கள் பதிகங்களை யாழில் இசைக்கிறேன்

என்று நான் கூறுவதற்கு முனைப்பை அளித்தது என் இறுமாப்பே. அந்த இறுமாப்பு இந்த யாழில் தோன்றியது,'' என்று சொல்லி அந்த யாழை உடைக்க ஒதுங்கினார். இதுகண்ட காழிப் பிள்ளையார் நகைத்த வாறு அவரைத் தடுத்து யாழைத் தம் கையில் வாங்கிக் கொண்டார். அவர் யாழ்ப்பணரிடம் ''இறைவன் திருவருட் சிறப்பு யாழில் அடங்குவதோ? இக் கருவியில் அடங்கும் பாடலை நீர் பாடிவருக'' எனக் கூறினார்.

காழிப் பிள்ளையார் அருள்மொழியைக் கேட்ட யாழ்ப்பாணர் தெளிவு பெற்றவராய் ஞானசம்பந்தப் பெருமானை வணங்கி மீண்டும் யாழைப் பெற்றுக் கொண்டார். பின்னர் ஞானசம்பந்தப் பெருமான் தருமபுரம் விட்டு திருநள்ளாறு வந்து இறைவரைத் தொழுது திருப்பதிகம் பாடினார். யாழ்ப்பாணரிடம் அதை யாழிலிட்டு வாசிக்கக் கேட்டுக்கொண்டார். யாழ்ப்பாணர் யாழிலிட்டு வாசிக்க, அதற்குக் காழிப் பிள்ளை தாளமிட்டும் பாடினார். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு, பிள்ளையார் திருச்சாத்தமங்கை என்னும் திருப்பதிக்கு வந்து சேர்ந்தார்.

திருநீலநக்கர் நட்பு

இங்கு வாழ்ந்து வரும் சிவநேசராகிய திருநீல நக்கர் அடியார்களுடன் சென்று காழிப்பிள்ளையாரை வணங்கி வரவேற்றார். அவர் அயவந்தி திருக் கோயிலுக்கு ஞானசம்பந்தப் பெருமானை அழைத்துச் சென்றார். காழிப்பிள்ளையார் இறைவரைத் தொழுது பாமாலை புனைந்தார். பின்னர் திருநீலநக்கர் வேண்டு

கோளுக்கிசைந்து அவரது இல்லத்தில் திருவமுது செய்து கொண்டார். பின்னர் பிள்ளையார் விருப்பப்படி திருநீலகண்ட யாழ்ப்பாணருக்கும் அவரது மனைவி யார்க்கும் அன்றிரவு துயிலத் தமது இல்லத் தினுள்ளேயே இடம் கொடுத்தார்.

மறுநாள் காலையில் காழிப்பிள்ளையார் திருக் கோயில் சென்று அயவந்திநாதரை வழிபட்டு, 'திருமார்க்கொன்றை மாலை' என்னும் திருப் பதிகத்தைப் பாடினார். இப் பதிகத்தில் இவர் திருநீல நக்கரைச் சிறப்பித்தருளினார். பின்னர் திருநீலநக்கரிடம் விடைபெற்றுப் புறப்பட்ட இவர், பல திருத்தலங்கள் சென்று இறைவரைத் தொழுது திருப்பதிகங்கள் பாடினார். மேலும் பிற திருப்பதிகளைத் தொழும் வேட்கையுடன் இவரது பயணம் தொடர்ந்தது.

சிறுத் தொண்டர் நட்பு

திருஞானசம்பந்தர் எழுந்தருளும் செய்தியைக் கேள்விப்பட்ட திருச்செங்காட்டாங்குடி சிறுத் தொண்டர் தம் நகரை அழகு செய்து ஆளுடைய பிள்ளையாரை எதிர்கொண்டார். அவரை வணங்கித் தம் ஊராகிய திருச்செங்காட்டாங்குடிக்கு அழைத்துச் சென்றார் சிறுத்தொண்டர். அங்குள்ள கணபதீச்சுரம் என்னும் திருக்கோயில் சென்று அங்குக் கோயில் கொண்ட இறைவரை வணங்கி, 'பைங்கோட்டு மலர்ப் புன்னை' என்னும் திருப்பதிகத்தைப் பாடினார். இப் பதிகத்தால் சிறுத்தொண்டரைச் சிறப்பித்தருளினார். இப்பகுதியில் சில நாட்கள் தங்கி, சிறுத்தொண்டரின் அன்பு விருந்தினராக இருந்தார். பின்னர் திருமருகல்

என்னும் திருப்பதிக்குச் சென்று அங்குக் கோயில் கொண்ட இறைவரை வணங்கி வந்தார்.

உயிர்க் கொடை

ஒருநாள் திருமருகல் கோயில் பக்கமுள்ள மடத்தில் வணிகன் ஒருவன் தன் உறவினரான கன்னியோடு தங்கியிருந்தான். இரவில் அவன் துயிலும்போது அரவு ஒன்று அவனைத் தீண்டியது. இதை அறிந்த அக்கன்னி கண்ணீர் விட்டுக் கதறி அழுதாள். பலவாறு புலம்பித் துடித்தாள். இச் செய்தியறிந்த சிலர், வணிகன் உயிர் மீட்சிக்கப் பலவித முயற்சிகள் செய்தனர். எதனாலும் பலன் கிட்டவில்லை.

ஏதும் கதியற்ற அப் பெண் கோயிலை நோக்கித் துயரத்தில் அரற்றிக் கொண்டிருந்தாள். காலைப் போதில் அவ்வழியே கோயிலுக்குச் சென்று கொண்டிருந்த திருஞானசம்பந்தப் பெருமான் இத் துயரக் குரலைக் கேட்டார். கருணைக் கனிவுகொண்ட அவர் அப்பெண்ணிடம் வந்து, நடந்ததைக் கேட்டறிந்தார். அவரது நெஞ்சம் உருகியது. திருமருகல் பெருமானை வணங்கி, 'சடையாய் எனுமால்' என்னும் திருப்பதிகத்தைப் பாடியருளினார். அக் கணமே அவ் வணிகன் உயிர் பெற்றெழுந்தான். பிள்ளையார் திருவடிகளில் வணிகனும் அக்கன்னியும் வீழ்ந்து வணங்கினர். அப்பெண்ணின் மகிழ்ச்சிக்கு ஓர் எல்லையே இல்லை. பின்னர் ஞானசம்பந்தப் பெருமான் அவ்விருவருக்கும் திருமணம் செய்து வைத்தார். அந்த இளம் மணமக்களுக்கு விடை கொடுத்தனுப்பிய அவர், பின்னர் திருமருகலில் தங்கியிருந்தார்.

சிறுத்தொண்டரது அழைப்பை ஏற்று மீண்டும் ஞானசம்பந்தர் திருச்செங்காட்டங்குடிக்குச் சென்றார். அங்கு அவருக்கு சிவபெருமான் தம் திருமருகல் காட்சியைக் கணபதீச்சரத்தில் காட்ட, ஆளுடைய பிள்ளையார் அப்பன் திருவருளை வியந்து, 'அங்கமும் வேதமும்' என்னும் திருப்பதிகத்தைப் பாடி அங்குச் சில நாட்கள் தங்கியிருந்தார். பின்னர் திருப்புகலூர் நோக்கிச் செல்வாராயினர்.

முருக நாயனார் அறிமுகம்

திருப்புகலூரில் சிவனார் திருத்தொண்டுகள் செய்து வருபவர் முருகநாயனார். இவர் பிள்ளையார் வருகையைக் கேட்டுப் பெருகிய மகிழ்ச்சியினராய் அவரை எதிர்கொண்டு வரவேற்றார். ஞானசம்பந்தப் பெருமான் அவருடன் திருக்கோயில் சென்றார். இம் மடத்தில் முருகநாயனாரின் விருந்தினராக அமர்ந்து அவரது நட்பில் மகிழ்வுற்றார். ஒருநாள் திருக்கோயில் சென்று இறைவரை வழிபட்டுத் திருப்பதிகம் பாடினார். இப்பதிகத்தில் முருகநாயனார் திருத் தொண்டு சிறப்பிக்கப்படுகிறது.

ஞான சம்பந்தரும் நாவுக்கரசரும்

திருஞான சம்பந்தர் முருக நாயனார் மடத்தில் தங்கியிருந்தபோது திருநாவுக்கரசர் திருவாரூர் சென்று வணங்கிவிட்டுத் திருப்புகலூர் நோக்கி வந்தார். இச்செய்தியறிந்த பிள்ளையார், திருநாவுக்கரசரைக் காணும் ஆவலினால் அடியார்களுடன் சென்று அவரை எதிர்கொண்டார். இருவரும் தாம் தாம் முந்தி ஒருவரை ஒருவர் வணங்கிக் கொண்டனர். இருவரும் ஒருவர்

நலனை மற்றவர் கேட்டுத் தெரிந்தனர். திருநாவுக் கரசரோடு உரையாடியதிலிருந்து ஞானசம்பந்தப் பெருமானுக்கு திருவாரூர் செல்லும் ஆர்வம் மிகுந்தது. அவர் திருநாவுக்கரசரை திருப்புகலூரில் தங்கியிருக்கச் சொல்லிவிட்டுத் தாம் திருவாரூர் செல்லானார். நாவுக் கரசர் முருகனார் மடத்தில் வீற்றிருந்தார்.

திருவாரூர் நோக்கிப் புறப்பட்ட திருஞான சம்பந்தர் அவ்வூரை நெருங்கியதும் அங்குள்ள அடியார் பெருமக்கள் அவரை எதிர்கொண்டு வரவேற்றனர். ஞானசம்பந்தப் பெருமான் இவ்வடியார்களுடன் எழுந் தருளி ஆலயம் சென்று வீதிவிடங்கப் பெருமானை தொழுது பதிகங்கள் பாடினார். பின்னர் வெளிவந்து அடியார்களுடன் அங்குள்ள மடத்தில் சில நாட்கள் தங்கியிருந்தார். இங்குத் தங்கியிருந்த நாட்களில் இவர் திருவாரூரின் அருகேயுள்ள பல திருப்பதிகள் சென்று வணங்கி மீண்டும் திருவாரூர் வந்து சேர்வார்.

இந்நாட்களில் திருஞானசம்பந்தருக்கு அப்பர் பெருமான் நினைவு எழுந்தது. எனவே அவர், 'பவனமாய், சோடையாய்' என்னும் திருப்பதிகம் பாடித் திருவாரூரிலிருந்து புறப்பட்டுத் திருப்புகலூரை நோக்கினார். முருகநாயனாரும் காழிப்பிள்ளையார் வருகையை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி கொண்டார். அவரை அடியார்களுடன் எதிர் கொள்ளவும்; அவர்கள் அன்பில் தோய்ந்து ஞானசம்பந்தர் நெகிழ்ந்து நின்றார். பின்னர் முருகநாயனார் மடம் வந்து அங்குத் தங்கி வரலானார். அவ்வேளை திருநீலநக்கரும் சிறுத் தொண்டரும் திருப்புகலூருக்கு வந்து ஞானப்பெரு

மக்களோடு இணைந்து கொண்டனர். சிவனடியார்கள் கூடியிருந்த நிலையில் மகிழ்வு கொண்ட திருஞான சம்பநர்தர் 'குறிகலந்திசை' என்னும் திருப்பதிகம் பாடி அனைவரையும் மகிழ்வித்தார்.

அப்பருடன் பயணம்

திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் மேலும் பல திருப்பதிகள் சென்று வழிபட விருப்பம் கொண்டனர். திருநீலநக்கரும் சிறுத்தொண்டரும் தம் தம் பதிசெல்ல இசைவு பெற்றனர். காழிப்பிள்ளை யாரும் சொல்லரசரும் புறப்பட்டு நடைகொண்டனர். ஆனால் நாவுக்கரசர் ஞானசம்பந்தரிடம், ''சிவனார் உமக்களித்த சிவிகையில் எழுந்தருள்க!'' என்றார். இது கேட்ட அவர் நாவுக்கரசரிடம், ''இதுவே இறையனார் திருவருள் போலும்! அங்ஙனமாயின் தாங்கள் முன்னே செல்க! நான் தங்களைப் பின் தொடர்ந்து வருகிறேன்'' என்றார். சொல்லரசரும் இதற்கிசைந்து அவ்வாறே செல்லலானார். திருஞானசம்பந்தர் அப்பர் சென்ற வழி கேட்டுத் திருவம்பரை அடைந்தார். இருஞானப் பெருமக்களும் அங்குள்ள திருக்கோயில் சென்று இறைவரை வழிபட்டுக் கொண்டனர். இருவரும் முதலில் ஒன்று சேர்ந்து சென்ற திருக்கோயில் இதுவே யாகும்.

பின்னர் இருவரும் திருக்கடவூர், திருவாக்கூர், திருமீயச்சூர், திருப்பாப்புரம், திருவீழிமிழலை போன்ற பல திருப்பதிகள் சென்று இறைவரை வழி பட்டனர். சீர்காழி திருத்தோணியப்பர் திருக்காட்சி யைத் திருவீழிமிழலையில் கண்டார் ஞானசம்பந்தர்.

தம்மை அழைத்துச்செல்ல வந்திருந்த சீர்காழி அந்தணர் களிடம் இச் செய்தியைத் தெரிவித்து, அவர்களைச் சீர்காழிக்குச் செல்ல விடைகொடுத்தனுப்பினார்.

இவ்விரு ஞானச் செல்வர்களும் இவ்வாறு தங்கியிருந்த நாட்களில் வானம் பொய்த்து வளம் சுருங்கியது. எங்கும் பஞ்சம். உணவின்றி உயிர்கள் வாடி வதங்கின. அடியார்களும் துன்பம் அனுபவித் தனர். இறைவர் இப்பெரு மக்கள் கனவில் தோன்றி, கோயிலின் கிழப்பீடத்திலும் மேல்பீடத்திலும் பொற் காசுகள் வழங்குவதாகவும் அவற்றைக் கொண்டு அடியார்களின் பசிப்பிணியைப் போக்கிக் கொள்ளவும் அருளினார். இரு ஞானப் பெருமக்களும் இறைவரின் பேரருளை வியந்தனர். அவன் அருளால் அவர்களுக்கு அப் பொற்காசுகள் கிடைத்தன. அவைகளைக் கொண்டு அடியார்களின் பசிப்பிணியை நீக்கினர். பின்னர் வானமும் மழை பெய்து வளம் சுரந்தது. மக்கள் பஞ்சம் தீர்ந்து களிப்புற்றனர்.

திருவீழி மிழலையில் தங்கியிருந்த ஞானசம்பந்தப் பெருமானும் அப்பர் பெருமானும் பல திருத்தலங்கள் சென்று இறைவரைத் தொழுது திருமறைக்காடு சேர்ந்தனர். அங்கு இறைவர் திருக்கோயிலின் திருக் கதவு நீண்ட நாட்களாக மூடப்பட்டிருந்தது. இக் கதவை இரு ஞானச் செல்வர்களும் திருப்பதிகங்கள் பாடி, இதைத் திறக்கவும் அடைக்கவும் செய்தனர். இது கண்ட அவ்வூர் மக்கள் வியப்பும் மகிழ்ச்சியும் ஒருங்கே கொண்டனர்.

திருநாவுக்கரசர் துயிலில் இறைவர் தோன்றி அவரைத் திருவாமூருக்கு அழைக்க, அப்பரும் அங்கே சென்றார். துயில் விழித்துப் பார்த்த திருஞானசம்பந்தர் அப்பரைக் காணாது, அவர் சென்ற இடம் கேட்டறிந்து தாமும் அவ்வூரை நோக்கினார். இறைவர் அம்பிகை யோடு ஆடும் கூத்தை ஞானசம்பந்தர் பெருமானுக்குக் காட்டியருளினார். அவர் அப்பர் பெருமானைச் சந்தித்து அக் காட்சியை அப்பருக்கும் காட்டினார். இருவரும் சில நாட்கள் இங்கே தங்கியிருந்து மதிசூடிய பெருமானை வாழ்த்தி வணங்கிக் கொண்டிருந்தனர். பின்னர் திருமறைக்காடு திரும்பினர்.

பாண்டி நாட்டு ஒற்றர்கள்

இக் காலத்தில் பாண்டி நாட்டில் சமணத்தின் ஆதிக்கம் பெருகிக் கொண்டிருந்தது. அரசனும் இச் சமயத்தில் சேர்ந்து, இதன் வளர்ச்சிக்கு முனைந்து வந்ததால் குடிமக்களில் பெரும்பாலோரும் இந் நெறியை மேற்கொண்டு ஒழுகி வரலாயினர். எனவே சைவம் பேணுவாரின்றி அருகி வந்தது. நல்ல காலமாக அரசன் மனைவியார் பாண்டிமாதேவியும் அமைச்சர் குலச்சிறையாரும் சைவ நெறியில் உண்மையான பற்றுதல் கொண்டு ஒழுகி வந்தனர். பாண்டி நாட்டின் அவல நிலையை எண்ணி இவர்கள் வருந்தினர். இந் நிலையை மாற்றிக் கொள்ள இறைவன் பேரருளை இரந்து வேண்டினர். இவ் வேளை அருள்மிக்க திரு ஞானசம்பந்தர் திருமறைக்காட்டில் எழுந்தருளியுள்ள செய்தி இவர்களுக்கு எட்டியது. மகிழ்ச்சிகொண்ட பாண்டிமாதேவியும் குலச்சிறையாரும் சிறந்த ஒற்றர்

களைத் தேர்ந்தெடுத்தனர். பாண்டி நாட்டில் சைவத்தின் அருகிய நிலையை சம்பந்தப் பெருமானுக்குத் தெரிவிக்கச் சொல்லி அவர்களைத் திருமறைக் காட்டுக்கு அனுப்பி வைத்தார்கள். திருமறைக்காடு வந்த அவர்கள் சம்பந்தப் பெருமானைச் சந்தித்து, அரசியாரும் அமைச்சரும் சொல்லியனுப்பிய செய்தியைத் தெரிவித்தனர். இது கேட்ட ஞானசம்பந்தர் பாண்டி நாடு செல்ல விருப்பம் கொண்டார். இதை அறிந்த அப்பர்பெருமான் சமணர்களின் வஞ்சக இயல் பினையுரைத்தோடு, காலநிலையும் தக்கதல்ல எனக் கூறி ஞானசம்பந்தரை அங்குச் செல்ல வேண்டாம் எனத்தடுத்தார்.

காழிப்பிள்ளையார் அப்பரிடம், ''சிவபிரான் திருவடியை வணங்கும் நமக்கு எதனாலும் இன்னல் நேராது. ஏன் நீங்கள் அஞ்சுகிறீர்கள்?'' என்று கூறி, 'கோளறு' திருப்பதிகம் பாடினார். இதன் பின்னர் அப்பர் தடையேதும் சொல்லவில்லை. ஞானசம்பந்தர் வேண்டிக்கொண்டபடி நாவுக்கரசரும் திருமறைக் காட்டிலேயே தங்கியிருந்தார்.

பாண்டி நாட்டில்

இறைவரைத் தொழுது அருள் பெற்று, அனை வரிடமும் விடையும் பெற்று ஞானசம்பந்தப் பெருமான் பாண்டிநாடு செல்ல முத்துச் சிவிகையில் ஏறினார். தொண்டர்கள் மறையொலி முழக்கினார்கள். மங்கல முரசுகள் நாதம் பொழிந்தன. அஞ்செழுத்தை ஓதி செஞ்சொல் ஞானக் கோமான் தென்னாட்டை நோக்கினார். வழியெங்கும் சிவ அடியார்கள் அவரை

வரவேற்றுத் தொழுதனர். அங்கங்கே திருப்பதிகள் சென்று சிவபிரானை வணங்கித் தீஞ்சொல் பாமாலைகள் புனைந்தார். சிவனாரைச் சிந்தையில் எண்ணி யாத்திரைசென்ற ஞானசம்பந்தப் பெருமான் மதுரையை நெருங்கினார்.

அந் நாளில் சமணர்கள் தீக்கனவுகள் கண்டு திகைத்தனர். அவர்கள் நகரத்தில் ஒருங்குகூடித் தாம் கண்ட தீக்கனவுகள் குறித்துப் பேசிக்கொண்டனர். தங்களுக்கு இன்னல்கள் நேரலாம் என எண்ணிக் கவலை கொள்கின்றனர். இவ் வேளை பாண்டிமா தேவிக்கும் குலச்சிறையாருக்கும் நல்ல அறிகுறிகள் தென்பட்டன. அவர்கள் அகத்தில் மகிழ்ச்சி; முகத்தில் மலர்ச்சியும் புத்தொளியும். அவ்வேளை சிலர் ஓடோடி வந்து ஞானசம்பந்தப் பெருமான் வருகையைத் தெரிவிக்கின்றனர். அப்போது அவர்களிடம் தோன்றிய இனிய உணர்ச்சிப் பெருக்கை என்னவென்று சொல்வது!

பாண்டிமாதேவியாரின் உரைப்படி குலச்சிறையார் திருஞானசம்பந்தப் பெருமானைக் கண்டு வணங்கி ஆனந்த உணர்வு கொண்டார். அடிவீழ்ந்து தொழுத அவர், செயல் மறந்த நிலையில் கிடந்தார். ஞான சம்பந்தப் பெருமான் இச் செய்தியறிந்து முத்துச் சிவிகையினின்றும் கீழே இறங்கினார். தமது திருக்கை களால் குலச் சிறையாரை எடுத்து நலம் வினவினார். அவரது வருகையால் பாண்டிநாடு உய்ய இருப்பதை உரைத்தார் அமைச்சர்.

மதுரையில்

மதுரைத் திருநகர் காட்சி அளித்தது. ஞான சம்பந்தப் பெருமான் பூமியில் படிந்து இறைவரைத் தொழுது 'மங்கையர்க்கரசி' என்னும் திருப்பதிகத்தைப் பாடியருளினார். 'ஆலவாய் ஆவதும் இதுவே' என்று செந்தமிழ்ப் பா பாடி இறைவரைத் தொழுது கொண்டார். பாமாலைகள் பாடிப் பரவினார். அமைச்சர் குலச்சிறையார், அரசியாரை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார். பாண்டிமாதேவியார் காழிப் பிள்ளையார் காலடி வீழ்ந்து வணங்கினார். அவரது வருகையை, தாங்கள் செய்த பேறு எனக்கூறி அவரை மீண்டும் வணங்கினார். அரசியார் விடை பெற்றுச் சென்றபின் குலச்சிறையார் ஞானசம்பந்தப் பெருமான் தங்குவதற்குத் திருமடம் ஒன்றைக் காட்டினார். அவரும் அடியார்களும் அம் மடத் திலேயே தங்கியிருந்தனர்.

ஞானசம்பந்தப் பெருமான் மதுரை நகர் வந்துள்ள செய்தியை அறிந்த சமணர்கள் கலக்கம் கொண்டவர் களாய் அரசர் அரண்மனை சென்று அவரைச் சந்தித் தனர். ஞானசம்பந்தர் வருகையை அவரிடம் கூறி அவரை நகரைவிட்டுத் துரத்த வேண்டும் என்றனர். சமணர்கள் விருப்பப்படி காழிப் பிள்ளையார் தங்கி யிருக்கும் மடத்தில் தீயிட மன்னர் இசைவளித்தார். மகிழ்ச்சியோடு சமணர்கள் அரண்மனையை விட்டு வெளியேறினர்.

இவர்கள் சென்றதும் அரசியார் அரசரைச் சந்தித்தார். கவலையுற்றிருந்த மன்னரிடம் காரணம்

கேட்க, அவர் ஞானசம்பந்தர் வருகையைப் பற்றித் தெரிவித்தார். அரசியார் அதற்கு "இரு கூட்டத் தாருள்ளும் வாதில் யார் வெற்றி பெறுகிறார்களோ, அவர்கள் பக்கம் நாம் சேர்வோம். இதற்காகக் கவலை கொள்ளவேண்டாம்" எனக் கூறி மகிழ்ச்சியுடன் வெளி யேறினார்.

தீயவர் இட்ட தீ

அரசரிடம் இசைவு பெற்ற சமணர்கள் தங்கள் தீச்செயலைச் செய்வதற்குத் துணிவு கொண்டனர். ஞானசம்பந்தர் தங்கியிருந்த மடத்தில் மந்திரம் ஓதியும் தீப்பற்றாது போகவே அவர்கள் தாமே சென்று அங்கு நெருப்பு வைத்தனர். இதனைக் கண்ட சிவனடியார்கள் ஆளுடைய பிள்ளையாரிடம் சென்று அறிவித்தனர். பிள்ளையார் இது கேட்டு மனம் நொந்தார். தீயவரின் வன்கண்மை அவரிடம் சினத்தை எழுப்பியது. சமணர்கள் தமக்குச் செய்த தீங்கு சிவனடியார்களுக்குச் செய்ததென ஞானசம்பந்தப் பெருமான் எண்ணினார். அரசனின் சீர்கெட்ட ஆட்சியே இதற்குக் காரணம் என்பதை உணர்ந்த பெருமான் 'பையவே சென்று பாண்டியற்காகவே' என்று பாடி அப் பயனைப் பாண்டியன் பெறுக எனத் திருவுளம் கொண்டார்.

அரசருக்கு நோய்

காழிப்பிள்ளையார் வாக்கின் வேகம் அரசருக்கு வெப்பு நோயை உண்டாக்கியது. வேதனையால் புலம்பித் துடித்தார் வேந்தர். அரசியும் அமைச்சரும் மன்னர் பக்கம் வந்தனர். மன்னர் மேனியிலிருந்து

வீசிய வெம்மை அருகு வருவோரையும் அலக் கழித்தது. இன்னலால் துயருற்ற அவர் நிலை கண்டு மனம் உருகினர் அரசியும் அமைச்சரும். சமணர்களும் இச் செய்தி கேட்டு அரசர் பக்கம் வந்தார்கள். அவர்கள் மந்திரம் ஓதி, மயிற்பீலி கொண்டு மன்னர் உடலைத் தடவினார்கள். பீலி கரிந்ததேயன்றி மன்னர் உடலின் வெம்மை தணியவில்லை. அவர்கள் கமண்டல நீரை மன்னர் மீது தெளித்தனர். அது நெருப்பிலிட்ட நெய் போல் ஆகி அரசரின் வேதனையை மேலும் மிகு வித்தது. எனவே அரசர் அச்சமணர்களைத் தம் பக்க மிருந்து அகன்று போகுமாறு கூறினார்.

ஞானசம்பந்தர் வருகை

அமைச்சரும் அரசியாரும் மன்னர் அருகே வந்து, "சமணர்கள் ஞானசம்பந்தப் பெருமானுக்குச் செய்த வினையின் விளைவே இந்நோய்போல் தெரிகிறது. அவரால் இந் நோயைத் தீர்த்துவிட முடியும்" என இதமாக மொழிந்தனர்.

அரசருக்கு இம்மொழிகள் மகிழ்ச்சியையும் ஆறுதலையும் அளித்தன. அவர், ஞானசம்பந்தரை அழைத்து வர இசைவளித்தார். அமைச்சரும் அரசி யாரும் காழிப்பிள்ளையார் தங்கியிருந்த மடம் சென்று அரண்மனையில் நடந்த நிகழ்ச்சியைக் கூறி அவரை அரண்மனைக்கு எழுந்தருள வேண்டினர். அவரும் அதற்கு இசைந்து ஆலவாய்ப் பெருமான் திருக்கோயில் சென்று வணங்கி, அருள் பெற்று அரண்மனை நோக்கினார்.

இச் செய்தி கேட்ட சமணர்கள் அச்சம் கொண்டனர். அவர்கள் அரசிடம் வந்து ஞான சம்பந்தரை அழைத்தற்கு மனம் நொந்து கொண்டார்கள். பின்னர் மன்னரிடம், ''நோயைக் குணப்படுத்தும் பொறுப்பை எங்கள் இருவருக்கும் கொடுங்கள். நோயை அவரே தீர்த்தாலும் எங்களால் தீர்ந்ததென்று அறிவிக்க உடன் படுக'' என்று வேண்டினார்கள். நீதிநெறியுடைய அரசர் இதற்கு இசைவாரோ? அவர் சமணர்களிடம் ''வஞ்சகம் சொல்லேன், உங்கள் தெய்வ அருளால் நோயைத் தீருங்கள்'' என்று பதிலளித்தார். இம்மொழி கேட்டதுமே அவர்கள் மனம் அதிர்ந்தவர்களாய் செய்வதறியாது திகைத்தனர்.

சிவம் பெருக்கும் சீலராகிய திருஞானசம்பந்தர் அரண்மனையில் வந்திறங்கி, அரசர் அருகே சென்றார். அவரைக் கண்ட பாண்டியருக்குத் தம்மை அறியா மலேயே ஒரு மதிப்பும் பக்தியும் திருஞானசம்பந் தரிடம் ஏற்பட்டன. அரசர் ஞானப்பெருமானைக் குறித்துக் கேட்டுக்கொண்டார். அவர் அரசரோடு உரை யாடியதில் அவரது அருள்தன்மை மன்னருக்குப் புலப் பட்டது. இதைக் கண்ட சமணர்கள் சீற்றம் கொண்டவர் களாய் அவரிடம் வாதிட்டனர். அதற்கு அமைதியுடன் தக்க பதில்களை அளித்தார் ஞானசம்பந்தர். இதனால் மேலும் பொறாமை கொண்ட சமணர்கள் அவரைத் தாக்கும் மன உறுத்தலோடு அவர் அருகே தாவினர். இது கண்ட அரசியார் கொடிய சமணர்களால் சைவக் குலக்கொழுந்தாகிய ஞானசம்பந்தருக்கு ஏதேனும் இன்னல் ஏற்பட்டுவிடக்கூடாது என எண்ணியவராய்

அரசரைப் பார்த்து, ''பிள்ளையாரோ ஒருவர், அதிலும் சிறுவர். சமணர்கள் பலராக உள்ளனர். தங்கள் நோயினைத் தீர்க்க முதலில் அவருக்கு இசைவு கொடுங்கள். அவரால் நோய் தீர்ந்தபின் சமணர்கள் வாதம் செய்து கொள்ளட்டும்'' எனக் கூறினார்.

அரசர் இது கேட்டு அரசியாரைப் பார்த்து ''நீ வருந்த வேண்டாம். வாது இனி வேண்டாம்'' என்று சொல்லியவாறு சமணர்களைப் பார்த்து, ''நீங்களும் இவரும் எனது நோயைத்தீர்ப்பதின் மூலம் உங்கள் தெய்வ ஆற்றலைத் தெளிவித்துக் கொள்ளலாம்'' என்றார்.

நோய் நீங்கியது

சமணர்கள் அரசரின் இடப்பக்கத்து நோயினைத் தீர்க்க முனைந்து மந்திரம் ஓதி மயிற்பீலியால் தடவினார்கள். ஆனால் நோய் குறையாது மேலும் பெருகி வெப்பம் மிகுந்தது. துடிதுடித்த மன்னர் காழிப்பிள்ளையாரைப் பார்த்தார். அவர் இறைவரை நினைந்து 'மந்திரமாவது நீறு' என்னும் திருப் பதிகத்தைப் பாடி, அரசரது வலப்பக்கத்தில் திரு நீற்றைப் பூசினார். பூசிய அப்பகுதி குளிர்ச்சிகொண்டு, அதிலிருந்த நோய் இடப்பக்கம் போய் மிகுந்த வெம்மையைக் கொடுத்தது. அங்கு தடவிய சமணரது மயிற்பீலிகள் கருகிச் சாம்பலாயின. அரசர் சமணர் களைப் பார்த்து, ''நீங்கள் தோற்றீர்கள். என்னை விட்டு அகலுங்கள்'' என்றார். அவர்கள் சென்ற பின் மன்னர் வேண்டுதல்படி அவரது இடப்பபக்கத்து நோயையும் ஞானசம்பந்தப் பெருமான் தீர்த்தருளினார். அரசர்

ஞானப்பெருமானைக் கைகூப்பித் தொழுது, ''நான் உய்வு பெற்றேன்'' என்றார். அரசியாரும், அமைச்சர் குலச்சிறையாரும் பெரும் மகிழ்ச்சி கொண்டனர்.

கூன் நிமிர்ந்தது

தோல்வி பெற்று வெளியேறிய சமணர்கள் அம் மட்டோடு நிற்கவில்லை. ஞானசம்பந்தப் பெருமானை அனல் வாதம், புனல் வாதத்துக்கு இழுத்தனர். காழிப்பிள்ளையார் அவற்றையும் திண்மையுடன் ஏற்று வெற்றி பெற்றார். அவர் பாடிய 'வாழ்க அந்தணர்' என்ற பாடலில் 'வேந்தனும் ஓங்குக' என்றிருந்தமை யால் அரசருக்கு ஏற்கனவே இருந்த கூன் நிமிரப் பெற்றது. இது கண்டு அனைவரும் வியப்பு கொண்டனர். மன்னர் கொண்ட மகிழ்ச்சிக்கு ஓர் வரம்பும் உண்டோ?

சைவத்தின் உண்மையை உணர்ந்தார் அரசர். தாம் செய்த தவறுகளுக்குக் கழிவிரக்கம் கொண்டார். ஞான சம்பந்தர் அரசருக்குத் திருநீறு அளிக்க அரசர் பக்தி யோடும் பணிவோடும் அதை வாங்கி அணிந்து கொண்டார். பின்னர் கேட்பானேன்? பாண்டிநாடு முழுதும் திருநீறு மயமாயிற்று. மக்கள் அனைவரும் சைவநெறியில் ஈடுபட்டனர்.

ஞானசம்பந்தர் மதுரைத் திருமடத்தில் தங்கி யிருந்த நாட்களில் அவரது தந்தையார் சிவபாத விருதயர் அங்குத் தம் புதல்வரைச் சந்திக்க வந்தார். அவரைக் கண்ட காழிப்பிள்ளையார் எதிர்கொள்ள, சிவபாதவிருதயர் மகிழ்ச்சிக் கடலில் திளைத்தார்.

பாண்டி நாட்டில் நடைபெற்ற அனைத்து நிகழ்ச்சிகளையும் அறிந்து ஆனந்த உணர்வில் தோய்ந்தார்.

தந்தையாரைக் கண்டதும் ஞானசம்பந்தருக்கு தோணியப்பர் நினைவு கிளர்ந்தது. அந்நினைவில் திருப்பதிகம் பாடினார். மேலும் அவருக்குப் பல திருப்பதிகள் சென்று தொழும் ஆர்வம் தோன்றியது. எனவே அடியார்கள் சூழ்ந்துவர, தென்பகுதியிலுள்ள பாண்டிநாட்டிலுள்ள பல திருப்பதிகள் சென்று இறைவரைத் தொழுது பாமாலைகள் புனைந்து பரவினார். பின்னர் பாண்டிநாடு விட்டுச் சோழநாடு செல்ல விரும்பினார். பாண்டிமாதேவிக்கும் அமைச்சர் குலச்சிறையாருக்கும் விடைகொடுத்து, அவர்களைப் பாண்டிநாட்டில் சைவம் வளரத் தளராது பணி செய்யக் கூறினார். ஞானசம்பந்தர் பிரிந்து செல்வதை அவர்களால் தாங்கிக்கொள்ள இயலவில்லை. நெஞ்சம் உருகிக் கரைந்தனர்.

சோழநாடு செல்லல்

அனைவருக்கும் விடைகொடுத்துச் சோழநாடு புறப்பட்ட ஞானசம்பந்தர் இடையே பல திருப்பதிகளுக்குச் சென்று வணங்கினார். ஓடக்காரரின்றியே அடியார்களுடன் ஓடத்திலேறித் திருக்கொள்ளம் புதூர் சென்று அங்கு இறைவரைத் தொழுது 'பாடகமெல்லடி' என்னும் திருப்பதிகத்தைப் பாடினார்.

இங்கு சில நாட்கள் தங்கியிருந்த பின்னர் போதிமங்கை என்னும் ஊர் நோக்கிச் சென்றார். இவ்வூர் பௌத்தர்கள் குடியிருப்பு மிகுந்தது. இப்பௌத்தர்

களின் தலைவராக புத்தநந்தி என்பவர் இருந்தார். இவர் சீற்றம் மிகுந்து காழிப்பிள்ளையாருக்கு மிகத் தொல்லையை விளைவித்தார். திருமுறைகளை எழுதி வருகின்ற அன்பர்கள், 'புத்தர் சமண் கழுக்கையர்' என்னும் ஞானசம்பந்தப் பெருமான் பாடலைத் தொடங்கி, 'அத்திரமாவன அஞ்செழுத்துமே' என்ற பாடலை ஓதி, 'புத்த நந்தியின் தலை இடிதாக்கி வீழக் கடவது' என்றனர். அச் சமயமே. புத்தநந்தியின் உடல் வேறு தலை வேறு ஆயிற்று. அடியார்களிடமிருந்து இச்செய்தியை அறிந்த காழிப்பிள்ளையார், 'பிழை இழைத்தோர்க்குக் கிடைத்த பயன் இது' என்று கூறி, அடியார்களைச் சிவநாமத்தை முழக்குமாறு கூறினார். புத்தநந்தியின் அவல நிலையைக் கண்ட பௌத்தர்கள் இன்னொரு தலைவனாகிய சாரிபுத்தன் என்பவனைச் சம்பந்தரிடம் அழைத்து வந்தார்கள். அவன் காழிப் பிள்ளையாரிடம் வாது புரிந்தான். அதில் அவன் தோல்வி பெற்று, அவர்முன் வீழ்ந்து வணங்கிப் பணிந்தான். ஏனைய பௌத்தர்களும் தங்கள் தலைவன் செய்ததைப் போல் தாமும் செய்து பணிந்தனர். அனைவருக்கும் ஞானசம்பந்தர் திருநீறு அளித்துத் திருவருள் புரிந்தார்.

பின்னர் ஞானசம்பந்தர் திருக்கடவூர் சென்றார். இங்கு அவர் தங்கியிருந்த காலத்தில் திருநாவுக்கரசரின் நினைவு எழுந்தது. அவர் திருப்பூந்துருத்தியில் எழுந்தருளியுள்ள செய்தியும் இவர் காதில் விழுந்தது. எனவே திருப்பூந்துருத்தி நோக்கிப் பயணப்பட்டார் காழிப்பிள்ளையார்.

திருஞானசம்பந்தர் வருகையைக் கேள்வியுற்று திருநாவுக்கரசர், அவரைக் கண்டு தொழும் ஆர்வத் தோடு எதிர்கொள்ளச் சென்றார். அவ்வாறு சென்றவர் அடியார்கள் கூட்டத்திடையே புகுந்து முத்துச் சிவிகையைத் தாங்கி வருவோருள் தாமும் ஒருவராக ஆகிக்கொண்டார். அப்பரும், சிவிகையைத் தாங்கி வருகிறார் என்பதை அறிந்த ஞானசம்பந்தர் துணுக் குற்றவராய் சிவிகையினின்றும் கீழ் இறங்கி, "இவ்வாறு செய்வது தக்கதோ?" என்று கூறி வணங்க, நாவுக்கரசரும் "இதைவிட வேறு எதைச் செய்யும் ஆற்றலுடையேன்!" எனக் கூறித் தொழுதார். அடியார்கள் இவ்விரு ஞானப் பெருமக்களை ஒருசேரக் கண்டு வணங்கி வாழ்த்தினர். இவ்விருவரும் பூந்துருத்தி சென்று இறைவரைத் தொழுது சிலநாள் அங்குத் தங்கியிருந்தனர்.

இவ்விரு பெருமக்களும் தாம் சென்ற இடங்களில் தமக்கு ஏற்பட்ட அனுபவங்களைக் குறித்துப் பேசிக் கொண்டனர். பின்னர் ஞானசம்பந்தர் தொண்டை நாடு சென்று வணங்க ஆர்வம் கொண்டவராய் அப்பரிடம் விடைப்பெற்றுப் பயணத்தை மேற்கொண்டார். அப்பர் பாண்டிநாடு நோக்கினார். ஞானசம்பந்தர் தொண்டை நாட்டில் பல திருப்பதிகளை வணங்கி, திருவோத்தூரி லுள்ள ஒருவர் வேண்டுதல்படி திருப்பதிகம்பாடி அவரது ஆண் பனைகளைப் பெண் பனைகளாக்கினார். பின்னர் திருவோத்தூரினின்றும் பயணப்பட்டு பல திருத்தலங்களில் இறைவரைத் தொழுது, திருவாலங் காடு வந்து சேர்ந்தார். இப்பதி காரைக்காலம்மையார்

தலையால் நடந்து சென்று பேறு பெற்ற இடமன்றோ! இங்கு இறைவரின் கட்டளைப்படி பதிகம் பாடினார்.

பின்னர் இங்கிருந்தும் புறப்பட்டு, திருப்பதிகள் பல சென்று சிவபிரானைத் தொழுது, சிந்தை யுருகிச் செந்தமிழ்ப் பாமாலைகள் புனைந்தார். இயற்கை வளம் கொழித்து இனிய எழிலை விரிக்கும் திருக் காளத்தி வந்து சேர்ந்தார். பொன்முகலியாறு கடந்து மலையில் தாழ்வாரம் வந்து இறைவரை நினைந்து மலைமீது ஏறினார். அங்கு செஞ்சடைப் பெருமான் திருக்கோலம் கண்டு தொழுதார். முதிர்ந்த அன்பில் கனிந்த கண்ணப்பர் திருக்காட்சியைக் கண்டு ஞான சம்பந்தர் உள்ளம் நெகிழ்ந்தது. ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார். அவருக்கு ஓர் இன்பானுபவ உணர்ச்சி; அந்த உணர்ச்சிப் பெருக்கிலேயே மலையை விட்டுக் கீழிறங்கினார். அங்கிருந்தவாறே, வடநாட்டுத் திருப் பதிகளின் திக்குகள் நோக்கித் தொழுதார். பின்னர் திருக் காளத்தி நாதரைத் தொழுது கொண்டார். சம்பந்தப் பெருமானுக்குத் திருவொற்றியூர் செல்லும் எண்ணம் சிந்தையில் எழுந்தது. திருக்காளத்தியை விட்டு அவர் புறப்பட்டு வழியிலுள்ள திருப்பதிகள் பல சென்று, பிறைசூடிய பெருமானைத் தொழுது திருவொற்றியூர் வந்து சேர்ந்தார். அங்கு சில நாட்கள் தங்கி இறை வரைப் பாடிப் பரவிக் கொண்டிருந்தார்.

பூம்பாவையார்

இக் காலத்தில் மயிலாப்பூரிலுள்ள சிவநேசர் என்ற செல்வந்தருக்குப் பூம்பாவை என்னும் பெயருடைய புதல்வி ஒருவர் இருந்தார். இவர் அழகும் பண்பும்

கனிந்து திருமகள்போல் திகழ்ந்தார். சிவபிரானிடம் சிந்தையைச் செலுத்தி வந்த இவர், தன் புதல்விக்குக் கணவனாக வருபவர்க்குத் தம் நிதியனைத்தையும் கொடுக்கும் எண்ணத்தோடிருந்தார். இவர் ஞான சம்பந்தப் பெருமானின் அருள் செயல்களையும் கேள்விப்படுகிறார். அவருக்கே தம் திருமகளையும் திருவையும் தம்மையும் அளித்ததாகச் சொல்லிக் களி பேருவகையில் திளைக்கிறார்.

இவ்வாறு இருக்கும் நாட்களில் ஒருநாள் பூங்காவில் மல்லிகைப் பூப்பந்தரில் பூம்பாவையார் மலர் கொய்து கொண்டிருக்கும்போது அவரை அரவம் ஒன்று தீண்டிவிடுகிறது. தோழிகள் கதறித் துடித்துக் கண்ணீர் சொரிந்தவர்களாய் அவரை எடுத்துக் கன்னி மாடத்தில் கொண்டு கிடத்தினர். நஞ்சை அகற்றி அவர் உயிரைக் காக்கப் பலர் வந்து முயன்றும் பயனில்லாது போயிற்று.

சோகத்தில் மூழ்கி உருகி வாடிய சிவநேசர் வேறு யாது செய்வார்? ஒருவாறு அவர் மனம் தேறி "இப் பெண் திருஞானசம்பந்தருக்கு உரியவள்; இவள் உடலை எரித்துச் சாம்பலையும், எலும்பையும் அவர் வரும்வரை பாதுகாத்து வைப்போம்" என்று தம்முள் முடிவு செய்தார். அவ்வாறே செயல் நடத்தி அப் பொருள்களை ஒரு குடத்திலிட்டு அதை அணிமணி களால் எழில் செய்து கன்னி மாடத்திலேயே கொண்டு வைத்தார். நாள்தோறும் அதற்குப் பூமாலை சந்தனம் அணிவார். விளக்கேற்றி அதற்கு அன்னம் பாலிப்பார்.

இவரது இச் செயலைக் கண்டு பலரும் வியந்து, இவரது துன்ப நிலைக்கு உருகிக் கரைந்தனர்.

இவ்வேளை சிவநேசருக்குத் திருஞானசம்பந்தப் பெருமான் திருவெற்றியூர் எழுந்தருளியுள்ள செய்தி எட்டியது. அவரை அங்கிருந்து திருமயிலைக்கு அழைத்துவர முடிவு செய்து, திருமயிலையிலிருந்து திருவொற்றியூர் வரை நடைப் பந்தர் அமைக்க ஏற்பாடு செய்தார். அவ்வழியெல்லாம் வாழையும் கமுகும் நாட்டி அழகு செய்யப்பட்டது. சிவநேசர் அடியார் களுடன் மங்கலப் பொருள்களை ஏந்தித் திருவொற்றியூர் புறப்பட்டார். ஞானசம்பந்தப் பெருமானும் திருவொற்றியூரை விட்டுத் திருமயிலை நோக்கி வந்து கொண்டிருந்தார். சிவநேசர் காழிப் பிள்ளையாரைக் கண்டு களிபேருவகையில் நிலமிசை வீழ்ந்து வணங்கினார். சம்பந்தப்பெருமான் சிவிகையை விட்டிறங்கிச் சிவநேசரை எதிர்தொழுது அவரோடு சேர்ந்து கொண்டார். சிவநேசருக்கு நேர்ந்த துன்பத்தை அடியார்கள் வழி ஞானசம்பந்தர் அறிந்தார். அனைவரும் திருமயிலை வந்து சேர்ந்தனர்.

காழிப்பிள்ளையார் கபாலீசுவரர் திருக்கோயிலைக் கண்டதும் கைகுவித்து வணங்கி, உள்ளே புகுந்து இறைவரைத் தொழுதார். அங்கு நின்ற சிவநேசரைப் பார்த்து அவரது புதல்வியின் அன்புக் குடத்தைக் கொண்டு வந்து, கோயிலின் வெளிப்புறத்தே திரு வாயிலின் முன் வைத்துக்கொள்ளப் பணித்தார். சிவ நேசரும் அவ்வாறே செய்தார். சம்பந்தப் பெருமான் இறைவரை எண்ணி, 'மட்டிட்ட' என்னும் திருப்பதி

கத்தைத் தொடங்கி, 'போதியோ பூம்பாவாய்' எனப் பூம்பாவையாரை அழைத்துப் பாடினார். என்னே வியப்பு! குடமுடைந்திட அழகு மயிலென பூம் பாவையார் வெளித் தோன்றினார். இந் நிகழ்ச்சி கண்ட அங்குள்ளோர் அனைவரும் வியப்பும் களிப்பும் கொண்டனர். சிவநாம முழக்கம் செய்தனர்; சிந்தையில் இன்பச் சுனை பொங்க ஆரவாரித்தனர். அமர உலகினின்றும் மலர்கள் சொரியப் பெற்றன.

ஒளிமிக்க பூங்கொடி ஒன்று நிற்பதுபோல் பூம் பாவையார் அங்கே நின்று கொண்டிருந்தார். சிவ நேசரும் பூம்பாவையாரும் சம்பந்தப் பெருமான் அடி தொழுது வணங்கினார்கள். சிவநேசர் காழிப்பிள்ளை யாரிடம் பூம்பாவையாரைத் திருமணம் செய்து கொள்ள வேண்டினார். ஞானசம்பந்தப் பெருமான் சிவ நேசரிடம், "நஞ்சினால் உயிர் துறந்த இப்பெண்ணை இறைவர் திருவருளால் நாம் மீண்டும் தோன்றச் செய்தோம். எனது மகளைப் போன்ற இவளைக் குறித்து நீங்கள் இவ்வாறு சொல்லுதல் தக்கதல்ல" எனக் கூறினார். இவ்வுரை கேட்ட சிவநேசரும் அவரது உறவினரும் குழப்பமுற்று நின்றனர். அவர்களுக்கு ஞானச்செல்வர் ஆறுதலும் தேறுதலும் கூறினார். சிவநேசர் தாம் திருஞானசம்பந்தருக்கு உரிமை செய்த புதல்வியை வேறொருவருக்கு மணம் செய்து கொடுக்க விரும்பவில்லை. அப்பெண்ணைக் கன்னிமாடத் திலேயே கொண்டு இருத்தினார். அவ்வம்மையார் வாழ்நாள் முழுமையும் சிவனார் திருவடிகளில் சிந்தை செலுத்தி, பின்னர் அவர் திருவடி நீழலை அடைந்தார்.

திருமயிலையில் சில நாட்கள் தங்கியிருந்து பின்னர் அங்கிருந்தும் புறப்பட ஆயத்தமானார். அடியார்களுக்கும் ஏனைய சிவநேசர்களுக்கும் விடை கொடுத்துப் பயணத்தை மேற்கொண்டார். தில்லை திருப்பதிக்குச் செல்வதே அவரது இலக்காக இருந்தது. வழியிடையேயுள்ள பல திருப்பதிகளை வணங்கிப் பாமாலைகள் பாடித் தில்லை சேர்ந்தார். அங்குத் திருக்கூத்தாடும் பெருமானைத் தொழுது கொண்டிருந்த நாளில் சிவபாதவிருதயரும் ஏனைய மறையோர்களும் இங்கு வந்து சேர்ந்தார்கள். அவர்கள் காழிப்பிள்ளை யாரைச் சீர்காழிக்கு அழைத்துச் சென்றனர். சீர்காழி நெருங்கியதுமே ஞானசம்பந்தர் சிவிகையை விட்டிறங்கி 'வண்டார் குழலரிவை' என்னும் திருப்பதி கத்தைப் பாடினார். அப்பதியை அடைந்ததும் 'நலங் கொள் காழி சேர்மினே' என முடியும் பாடலைப் பாடி இறைவரை வழிபட்டார். பின்னர் தம் திருமாளிகை சென்று வீற்றிருந்தனர். அங்கு முருக நாயனாரும், திருநீலநக்க நாயனாரும் வந்து திருஞான சம்பந்தரைக் கண்டு வணங்கி கரையிலாக் களிப்பு கொண்டனர்.

சிவபாதவிருதயர்க்குப் பிள்ளையார்க்குத் திருமணம் செய்யவேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. இது குறித்து, அவர் தம் உறவினர்களுடன் கலந்து பேசினார். பின்னர் ஞானசம்பந்தரிடம் தம் கருத்தை அறிவித்தார். அவர் இதற்கு இசையாது, தாம் இறைவரிடம் பேரன்பு கொண்டுள்ளதாகவும் எனவே உலகத் தொடர்புகளில் ஈடுபடுவது தக்கதல்ல என்றும் அறிவித்தார். உறவினர்களும் ஏனையர்களும் அவரிடம், "மறைநெறியை உலகம் மேற்கொண்டு

உயர்வு பெற வழிகாட்டுவது போலவே தாங்கள் திருமணம் செய்தும் உலகுக்கு வழிகாட்ட வேண்டும்'' என வேண்டினார்கள்.

பிள்ளையார் இது குறித்துச் சிந்தித்தார். இறைவர் திருவருளை நினைத்து இதற்கு இசைந்தார். இவ்விசைவினைப் பெற்ற பெற்றோரும் அளவிலா மகிழ்ச்சி கொண்டனர். அவர்கள் திருமண முயற்சியில் ஈடுபட்டனர்.

திருநல்லூரிலுள்ள நம்பியாண்டார் நம்பி என்ற அந்தணரின் அருமைத் திருமகளாரை மணப் பெண்ணாகப் பெற்றோர் தேர்ந்தெடுத்தார்கள். திருமண நாள் குறிக்கப்பெற்றது. நம்பியாண்டார் நம்பிக்கும் நாளை அறிவித்தனர். எங்கும் திருமண ஓலைகள் அனுப்பப்பட்டன. நகரத்தார்க்கு முரசு முழக்கம் செய்து இச் செய்தி அறிவிக்கப்பட்டது. அவர்கள் அளவிலா மகிழ்ச்சி கொண்டனர். வீதிகளும் வீடுகளும் அழகு செய்யப்பட்டன. திருநல்லூரும் புகலியைப் போன்று புதுக்கோலம் பூண்டது.

திருமணநாளில் திருஞானசம்பந்தர் திருக்கோயில் சென்று தோணியப்பரை வணங்கித் திருவருள் பெற்றார். ம்றையவர்கள் ஓத, மங்கல இசைகள் முழங்க, நகரை வணங்கி, ஞானசம்பந்தர் முத்துச் சிவிகையில் ஏறினார். சின்னங்கள் ஒலிக்க, அடியார்கள் கூட்டமும் அன்பர்கள் கூட்டமும் முன்செல்ல, பிள்ளையார் திருநல்லூர் நோக்கிப் புறப்பட்டார்.

திருநல்லூர் சென்றதும் திருஞானசம்பந்தர் பெரு மணம் என்னும் திருக்கோயில் சென்று இறைவரைத் தொழுது அருள் பெற்றார். மற்றவர்கள் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் தங்கலாயினர். அந்தணர்கள் வேண்டுகோள்படி ஞானசம்பந்தர் திருமணக்கோலம் புனைந்து திருவெண்ணீறும் அணிந்தார். சிவிகையில் ஏறித் திருமணப் பந்தரை அடைந்தார். அங்கு மாணிக்க ஒளி வீசும் விதானத்தின் கீழ் மலர்ப் பீடத்தில் அமர்ந்தார். மங்கலமங்கையர் வாழ்த்து இசைத்தனர். மறையவர்கள் சூழ்ந்து நின்றனர்.

நம்பியாண்டார் நம்பி தம் மனைவியாருடன் பாலும் நீரும் கொண்டு வந்து பிள்ளையாரைச் சிவமாகவே எண்ணி அவருடைய திருவடிகளை விளக்கினர். மிகுந்த நீரைத் தம்மீதும் தம் உறவினர் மீதும் ஆர்வம் பெருகத் தெளித்துக் கொண்டார். அவர் பிள்ளையார் கைகளில் நீரைத் தெளித்து 'என் மகளை உமக்கு அளித்தேன்' என்றார். நல்ல நேரம் நெருங் கியதும் திருணப் பெண்ணை பெற்றவரும் உற்றவரும் அழைத்து வந்து பிள்ளையாரின் வலப்பக்கத்திலே அமர்த்தினார்கள். இருவரையும் ஒன்றாகக் கண்டவர் கள் இதயக் கனிவில் வாழ்த்து மொழிந்து, இன்பப் பேறு பெற்றவர்போல் ஆயினர்.

திருநீலநக்கநாயனார் இறைவரை வணங்கித் திருமணச் சடங்குகளைத் தொடங்கினார். தீயிலே பொரியிடப் பெற்றது. தீக்கடவுளை வலம் வர வேண்டிய திருஞானசம்பந்தப் பெருமான் திருமணப் பெண்ணின் செங்கரம் பற்றினார். அவ்வேளை தீயைச்

சிவமாக நினைத்த அவர், திருக்கோயில் செல்ல விரும்பினார். "இந்த இல்லொழுக்கம் வந்ததே! இவளோடு நான் இறைவன் திருத்தாள் சேர்வேன்" என்னும் உறுதி பூண்டார் பிள்ளையார், உறவினரும் ஏனையவரும் பின்தொடர இவர் பெருமணம் திருக்கோயில் சென்றார். இறைவரைத் தொழுது அவர் முன்னே நின்று, "கல்லூர்ப் பெருமணம்" என்னும் திருப்பதிகத்தைப் பாடி, "உன் பாத மெய்ந்நீழல் சேரும் பருவம் ஈது" என்றார்.

சிவசோதியில்

இறைவர், "திருஞானசம்பந்தனே, நீயும் நின் மனைவியும், இத்திருமணம் காண வந்தோரும் என்னிடம் இச்சோதியினுள்ளே வந்து சேருங்கள்" என்று அருள் செய்யவே, அங்குப் பேரொளி தோன்றியது. அவ்வொளி கோயிலையும் தன்னுட் கொண்டு அங்குச் செல்ல ஒரு திருவாயிலையும் வகுத்துக் காட்டியது.

இது கண்ட திருஞானசம்பந்தர் 'காதலாகிக் கசிந்து, எனத் தொடங்கும் நமச்சிவாயத் திருப்பதிகத்தை ஓதினார். அனைவரையும் ஐந்தெழுத்தை ஓதுமாறு பணித்தார். பின்னர் அவர் திருமணக் கூட்டத்தாரிடம், "பிறவித் துயரை நீக்க விரும்பும் எல்லோரும் இச்சோதியில் புகுங்கள்" என்றார். திருநீலநக்க நாயனார், முருகநாயனார், திருநீலகண்ட பெரும்பாணர், சிவபாதவிருதயர், நம்பியாண்டார் நம்பி முதலியோர் தம் தம் மனைவியாரோடும் உறவினரோடும், அச்சோதியில் புகுந்தனர். முத்துச்சிவிகை

சுமந்தோர், திருமணப் பணியில் ஈடுபட்டார், அடியார்கள், முனிவர்கள் முதலியோரும் இவ்வொளியில் நுழைந்தனர். திருஞானசம்பந்தப் பெருமான் தம் வாழ்க்கைத் துணைவியார் கையைப் பற்றிச் சிவசோதியை வலம் வந்து அதனுள் புகுந்து இறை வருடன் கலந்தனர்.

சோதி மறைந்தது. திருப்பெருமணக்கோயில் முன் போல் காணப்பட்டது. சோதியுள் புகும் பேறு பெறாதவர்கள் வாடி நின்றார்கள். வணங்கி வாழ்த்தினார்கள்.

8. வீரம் செறிந்த பக்தி

அடியார் ஒருவர் தமக்காக ஆண்டவரைப் பணி செய்ய ஏவிய செய்தியறிந்து, மற்றொரு அடியார் ஆற்ற இயலாத துன்பமும் சீற்றமும் கொண்டார்.

''இருந்து இருந்தும் இறைவரையா பணிசெய்ய அனுப்புவது? இதை நான் எவ்வாறு தாங்கிக் கொள் வேன்? அந்த அடியாரைக் கண்டால் என் நிலை எப்படி யாகுமோ?'' என்று தம்முள் நினைத்து நெஞ்சம் புண்ணானார்.

பின்னர் இந்த இரண்டு அடியார்களும் அன்பால் ஒன்றாக இணைந்து, இறைவரைத் தொழுது இன்னருள் பெற்றார்களென்றால் அது வியப்பிற்குரிய செய்தி யல்லவா? இந்த அரிய நிகழ்ச்சியைத் தெரிவிப்பதே கலிக்காமநாயனார் வரலாறு.

வளமிக்க சோழநாட்டில் திருப்பெருமங்கலம் என்பது சிறந்த பதியாகும். இப்பதியின் தெருவீதிகளில் என்றும் திருவிழாக்கள் நடந்துகொண்டிருக்கும். அவ் வீதிகளில், மங்கையர்கள் நடிக்கும் நாடக சாலைகளில்

எழும் மத்தள ஓசை, காதுகளில் இன்பத்தைப் பொழியும், வீட்டு முற்றங்களில் சின்னஞ் சிறுவர்கள் இனிய குரல் முழக்கி விளையாடிக் கொண்டிருப்பார்கள். உழவுத் தொழில் மிகுந்த இப் பதியில் எங்கும் செழுமை தாண்டவமாடும்.

இப்பதியில் வேளாண் மரபில் ஏயர்குடி என ஒரு பிரிவிருந்தது. இப்பிரிவிலுள்ள மக்கள், பரம்பரை பரம் பரையாகச் சோழ மன்னர்களிடம் சேனாதிபதிகளாகப் பணியாற்றி வந்தார்கள். இம்மரபில் தோன்றியவரே கலிக்காமர். இவரும் சோழ மன்னன் சேனைக்குத் தலைவராய் அமர்ந்து பணியாற்றி வந்தார். இவர் சிவபெருமானிடம் எல்லை கடந்த ஈடுபாடு கொண்டவர். இந்த ஈடுபாட்டின் காரணமாக இவர் அருகேயுள்ள திருப்புன்கூர் என்னும் திருப்பதியிலுள்ள திருக்கோயிலுக்குத் திருப்பணிகள் பல செய்து வந்தார்.

இவருக்குச் சுந்தரமூர்த்தி நாயனார் மீது தீராத கோபம். ஏன் இக்கோபம் எழுந்தது? சுந்தரமூர்த்தி நாயனார் தியாகேசப் பெருமானை பரவையாரிடம் தூது விட்டாரல்லவா? இச்செய்தியைக் கலிக்காமர் அறிந்திருந்தார். இதனால் அவரது உள்ளம் வெதும்பிப் போயிற்று. "இப்படியும் ஒரு செயலா? அடியான் ஒருவன் ஆண்டவனைத் தூதாக அனுப்புவதா? அதுவும் இரவு நேரம் ஒரு பெண்ணிடம். இது என்ன அட்டூழியச் செயல்! இச்செய்தி கேட்டும் நான் இருந்து கொண்டிருக்கிறேனே!" என்று எண்ணிப் புலம்பினார். நெஞ்சம் கலங்கி நொந்தார். கலிக்காமருக்குச்

சுந்தரமூர்த்தி நாயனார் மீது அளவிலா ஆத்திரமும் சீற்றமும் பொங்கின.

கலிக்காமர் இவ்வாறு மாறுபட்ட மனம் கொண்டிருப்பதைச் சுந்தரர் அறிந்தார். அவர் நெஞ்சத்தில் துயரம் விஞ்சி எழுந்தது. இறைவர் முன்சென்று இந்நிலையை முறையிட்டுக் கொண்டார். பிறைசூடிய பெருமான், சுந்தரர் முறையீட்டில் கனிவு கொண்டு இவ்விரு அடியார்களையும் இணைக்கத் திருவுளம் கொண்டார். இதன்படி கலிக்காமருக்குச் சூலை நோயை உண்டாக்கினார். அந்நோய் அவரது குடலைப் பற்றிக் கசக்கிப் பிழிந்தது போன்ற துன்பத்தைக் கொடுத்தது. கலிக்காமர் சிவனாரை நினைந்து நெஞ்சம் நெகிழ்ந்தார்; உருகிக் கரைந்தார். அவரை வணங்கிப் போற்றிப் பரவினார்.

சித்தம் நெகிழ்ந்த சிவபிரான் கலிக்காமர் முன்னே தோன்றி, "அன்பனே, இந்நோயைத் தீர்க்க வல்லவன் ஒருவனே. அவன் தான் வன்தொண்டன்" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

இதுகேட்ட கலிக்காமர், "எம்பெருமானே; வழி வழியாகத் தேவரீருக்குத் தொண்டு செய்யும் மரபில் தோன்றியவன் நான். சுந்தரனாகிய வன்தொண்டனோ புதிதாகத் தங்களுக்கு அடிமைப்பட்டவன். அவனாலா என் நோய் தீரவேண்டும்! அதைவிட இந்நோய் என்னை வருத்துவதே எனக்கு மகிழ்ச்சியைத் தரும்" எனக் கூறினார்.

அங்கிருந்தும் மறைந்த இறைவராகிய சிவ பெருமான் வன்தொண்டராகிய சுந்தரரிடம் தோன்றி, "அன்ப, கலிக்காமன் சூலை நோய்கொண்டு துன்பப் படுகிறான். நம்மால் இது அவனுக்கு நேர்ந்தது. நீ அவன் இருக்குமிடம் சென்று இந்நோயைத் தீர்த்திடுக!" என அருளினார். இது கேட்ட வன் தொண்டர் உவகையில் மலர்ச்சி பெற்றார். உடனேயே கலிக்காமர் இருக்குமிடம் செல்ல ஆயத்தமானார். அவர் இருப்பிடம் நோக்கித் தாம் வருகின்ற செய்தியை முன்கூட்டியே அவருக்கு அறிவிப்புக் கொடுத்தார் சுந்தரர்.

இச்செய்தி கேட்டு வெய்துயிர்த்தார் கலிக்காமர். "இறைவரை ஒரு பெண்ணிடம் தூதாக அனுப்பிய ஒருவனாலா என் நோய் தீரவேண்டும்? இம்மாதிரி யான பழி எனக்கு நேரலாமா? அவன் இங்கே வந்து எனது நோயைத் தீர்க்கு முன் எனது வயிற்றை நானே கிழித்துக் கொள்வேன்" என்று எண்ணியவராக உடை வாளை எடுத்துத் தம் எண்ணத்தை நிறைவு செய்தார். மாயச் சூலை நோய் தீர்ந்ததோடு அவரது ஆவியும் பிரிந்தது. என்னே அவரது வீரம் செறிந்த பக்தி!

கணவரின் செயலைக் கண்ட அவரது மனைவியார் தாமும் உயிர் துறக்க முனைந்தார். அந்நேரம் சிலர் அவரிடம் வந்து "வன்தொண்டர் வருகின்ற செய்தியை அறிவித்தனர். இதுகேட்ட அவ்வம்மையார் திகைப்புக் கொண்டார். என் செய்வது? அடியாரை உபசரித்தல் அரிய கடனன்றோ! எனவே அங்கு அழுது கொண்டிருந் தவரிடம், "அழுகையை நிறுத்துக" என ஆணை

வழங்கினார். கலிக்காமரை மறைவாக ஒரு இடத்தில் வைக்கப்பட்டு அங்கிருந்தவர்களால் வீடு தூய்மை செய்யப்பட்டது. பின்னர் வன்தொண்டப் பெருமானை எதிர்கொண்டழைத்து வர அம்மையார் சிலருக்கு அறிவித்தார். அவர்களும் ஆரூரரை வரவேற்று அழைத்து வந்தார்கள்.

கலிக்காமர் இல்லம் வந்த வன்றொண்டர் அங்கே இடப்பட்டிருந்த ஆசனத்தில் அமர்ந்தார். அவரை அர்ச்சித்துத் தொழுதனர் அனைவரும். அவற்றை யெல்லாம் ஏற்றுக்கொண்ட ஆரூரர், ''கலிக்காமர் எங்கே? அவரைப் பற்றியுள்ள சூலை நோயினைத் தீர்த்து அவருடன் இருக்கும் விருப்பத்தால் வந்துள்ளேன்'' என்றார்.

அம்மையார் ஏவலாளர்களை அழைத்து ''அவருக்குத் தீங்கு எதுவும் இல்லை. உள்ளே துயில் கின்றார்'' என்று அறிவிக்கக் கூறினார். ஏவலாளரும் அவ்வாறே சுந்தரர்க்கு அறிவித்தனர்.

இதற்கு சுந்தரர், நாயனாருக்குத் துன்பம் ஏதும் இல்லையாயினும் நான் அவரைக் காணுதல் வேண்டும். அப்போதே என் உள்ளம் தெளிவு பெறும்'' என உரைத்தார்.

இம்மொழிக்குப் பதில் என்ன சொல்வது? வேறு வழியின்றி அவர்கள் சுந்தரருக்குக் கலிக்காமரைக் காட்டினார்கள். துன்பத்தைத் தரும் ஆவி பிரிந்த அவரது உடலைப் பார்த்த சுந்தரர் ''யானும் உயிர் துறப்பேன்'' என்று உடைவாளைப் பற்றினார்.

இறைவர் பேரருளால் அப்போது நிகழ்ந்த அதிசயத்தை என்னவென்று சொல்வது? அப்போதே கலிக்காமர் நாயனார் உயிர் பெற்றெழுந்தார். ''கேளிரைக் காணப்பெற்றேன்'' என்று சொல்லி வன் தொண்டர் கையிலிருந்த வாளைப் பிடித்துக் கொண்டார். அவர் மண்ணில் வீழ்ந்து கலிக்காம நாயனாரை வணங்கினார். கலிக்காமனாரும் வன் தொண்டர் அடிமலர் வீழ்ந்து தொழுதார். இருவரும் ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டனர். அன்றுமுதல் இருவரும் இதயம் ஒன்றிய நண்பராயினர்.

இருவரும் திருப்புன்கூர் சென்று திருவாரூரை அடைந்தனர். அங்கு இறைவரைத் தொழுது வழிபட்டு வந்தனர். சிலநாட்கள் அவ்வாறு கழியவே, கலிக்காம நாயனார் ஆரூரரிடம் விடைபெற்றுத் தம் பதி வந்து சேர்ந்தார். அங்கிருந்து பெரும் திருத்தொண்டுகள் செய்து இறைவர் திருப்பதம் பெற்றார்.

இவ்வரலாற்றிலிருந்து இறை பக்தி பகைவரையும் இணைக்குந் தகையது என்பதைத் தெரிந்து கொள்கிறோம்.

9. மந்திரம் தந்த மறையோகி

திருக்கயிலாயத்தில் நந்தி தேவர் திருவருள் பெற்ற சிவயோகிகள் பலர். அவர்களில் ஒருவர் அணிமா முதலிய சித்திகள் பெற்றவர். ஒருமுறை இவர் தென் பொதிகையிலுள்ள அகத்திய முனிவரைக் கண்டு அளவளாவி மகிழ விருப்பம் கொண்டார். இவ் விருப்பத்தை நிறைவு செய்ய இவர் கயிலையினின்றும் பொதிகை நோக்கிப் புறப்பட்டார். அவ்வாறு புறப் பட்டவர் வழியிலுள்ள திருக்கேதாரம், நேபாளம் முதலான திருப்பதிகள் சென்று இறைவரைத் தொழுதார். புனிதமான கங்கையில் நீராடிக் காசி நாதரைத் தொழுதார். ஸ்ரீசைலம், திருக்காளத்தி, திருவாலங்காடு, காஞ்சிபுரம், திருவதிகை, சிதம்பரம் போன்ற திருப்பதிகளில் கோயில் கொண்டுள்ள இறைவரை வணங்கி, திருவாவடுதுறையைச் சேர்ந் தார். இத் திருப்பதிக்கு அவர் வந்ததும் இதை விட்டு நீங்காத ஓர் உணர்வு அவரது நெஞ்சத்தில் எழுந்தது. இங்கு பிறைசூடிய பெருமானை வணங்கி வழிபட்டுக் கொண்டிருந்தார். ஒருநாள் அவர் திருவாவடுதுறையை விட்டுக் காவிரிக் கரை வழியாகச் செல்லும்போது

அங்கேயுள்ள காட்டில் அவர் கண்ட ஒரு காட்சி அவரது உள்ளத்தை உருக்கியது. அக்காட்சிதான் என்ன?

அங்கே பசுக் கூட்டங்கள் கண்ணீர் சொரிந்து அழுது கொண்டிருந்தன. அவற்றின் நடுவே அவற்றை மேய்த்து வந்த மூலன் என்பவனின் ஆவி பிரிந்த உடல் கிடந்தது. ஏன் இது? பசுக்களை மேய்க்க வந்த இடத்தில் அவன் உயிர் அகன்றிருந்தது. அவனது பிரிவை ஆற்ற இயலாத பசுக்கள் பெருந் துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருந்தன.

இக் காட்சியைக் கண்ட சிவயோகியார் உள்ளத்தில் இரக்க உணர்ச்சி ஊற்றெடுத்துப் பொங்கியது. மூலனைச் சுற்றிச் சுற்றி மோந்து பார்த்துக் கதறிக் கொண்டிருந்த அப் பசுக்களுக்கு மூலன் மீதுள்ள அன்பையும் பற்றுதலையும் கண்டு அவர் நெகிழ்ச்சி கொண்டார். அவைகளுக்கு அவன் இல்லாத குறையைப் போக்கி, அவற்றைப் பாதுகாக்க அவர் நெஞ்சம் விரும்பியது. அவர் சித்தி பெற்ற சிவயோகி அல்லவா! அவர் தமது உடலைப் பாதுகாப்பாக ஓரிடத்தில் வைத்துவிட்டுத் தம் உயிரை மூலனது வெற்றுடலில் புகுத்தினார். உறங்கி எழுந்தவர்போல் எழுந்து திருமூலரானார். இதைக் கண்ட பசுக்கள் மூலனே வந்ததாக எண்ணிக் களி கொண்டன. கனைத்துக் குதித்தன. திருமூலரை மோந்து பார்த்து, நாவினால் நக்கி மகிழ்வுற்றன. திருமூலர் அவை மேயும் இடம் சென்று, நிழலில் தங்க வைத்து, நீரூட்டி அவைகளைப் பேணிக்காத்தார்.

மாலைப் பொழுதானதும் பசுக்கள் சாத்தனூரை நோக்கிச் செல்லலாயின. திருமூலரும் அவற்றைப் பின் தொடர்ந்து சென்றார். பசுக்கள் அதனதன் வீடு செல்ல, திருமூலர் வீதியில் ஓர் பக்கம் தனியே நின்று கொண்டார்.

மூலனின் மனைவி பொழுது சாய்ந்தும் தன் கணவன் வராததைக் கண்டு மிகவும் கவலை கொண்டாள். அவள் வெளியே வந்து பார்த்துத் தெரு வீதியில் மூலன் உருவத்தில் நின்று கொண்டிருந்த சிவ யோகியார் பக்கம் வந்து "ஏன் இப்படி இங்கே நிற்கிறீர்கள்? தீட்டா உங்களுக்கு?" என்று கேட்டு அவரை நெருங்கினாள்.

திருமூலர் விலகி நின்றவராய் "அம்மா நீ என்னைத் தீண்டாதே. நான் உனது கணவன் அல்லன்" என்று கூறினார்.

இம்மொழி கேட்ட அம்மங்கை திகைப்பும் மயக்கமும் கொண்டவளாய் "இது என்ன விளையாட்டு?" எனக் கேட்டாள்.

திருமூலர் அவளிடம், "உனக்கும் எனக்கும் தொடர்பேதும் இல்லை" என்று சொல்லி அவர் அங்குள்ள பொதுமடம் ஒன்றில் புகுந்தார்.

மூலனின் மனைவிக்கு இரவில் தூக்கமே வரவில்லை. அவள் துயரத்தால் வாடித் துவண்டாள். நேரம் விடிந்ததும் அவள் ஊர்ப் பெருமக்களிடம் தன் கணவன் செயல் குறித்து அறிவித்தார். அவர்கள்

திருமூலர் பக்கம் வந்து பார்த்தார்கள். பார்த்த அவர்கள் மூலன் மனைவியிடம், "இவர் பைத்தியம் கொண்ட வரல்ல. வேறு மயக்கமும் அல்ல. இவரது இதயம் சிவ யோகத்தில் மூழ்கியுள்ளது. ஞானியாகிய இவர் இனிக் குடும்ப வாழ்வில் ஈடுபடார்" என்று தெரிவித்தனர். இதைக் கேட்ட மூலன் மனைவி துயரத்தில் மூழ்கித் துவண்டாள். பெருமக்கள் அவ்வம்மைக்குத் தேறுதல் கூறி அழைத்துச் சென்றனர்.

திருமூலர் தெருவீதியை விட்டுப் பசுக்கள் வந்த வழி சென்று தமது உடலைப் பாதுகாத்து வைத்திருந்த இடத்துக்குச் சென்றார். அங்கே அவர் உடல் காணப் படவில்லை. சிவாகமத்தின் உண்மைப் பொருளை இனிய செந்தமிழில் தம் வழியாக விளக்கி வெளி யிடவே மன்றிலாடும் சிவபிரான் இவ்வாறு செய்தார் என்பதைத் தமது ஞானத்தால் திருமூலர் உணர்ந்து தெளிந்தார்.

இத் தெளிவு பெற்ற அவர் திருவாவடுதுறை சென்றடைந்தார். அங்குத் திருக்கோயிலுனுள் சென்று இறைவரைத் தொழுது இதயம் உருகினார். பின்னர் அவ்வாலயத்தின் மேற்புறத்திலுள்ள அரசமரத்தடியில் அமர்ந்து சிவயோகத்தில் மூழ்கலுற்றார். மூவாயிரம் ஆண்டுகள் இந்த யோகநிலை நீடித்தது. ஆண்டு ஒன்றுக்கு ஒரு மந்திரமாக மூவாயிரம் மந்திரங்களை இவர் பாடியருளினார். இத்திருப்பணி முற்றுப் பெற்றதும் இவர் கயிலை சென்றடைந்தார்.

10. அருளால் விழிபெற்ற அடியார்

சோழவள நாட்டில் சிறந்த ஊர் திருஆரூர். இவ்வூரில் பிறந்தவர் தண்டியடிகள். இவர் பிறவியிலேயே குருடராக இருந்தார் என்றாலும் இவரது நெஞ்சம் செஞ்சடைப் பெருமானை நினைந்து நினைந்து அவரிடம் நிலைத்திருந்தது. அரனார் திருக்கோயில் சென்று அஞ்செழுத்தை ஓதி வழிபட்டு வருவதை நாளுட் தவறாது இவர் மேற்கொண்டிருந்தார்.

இக்கோயிலின் மேற்குப் பக்கம் உள்ள திருக்குளம் இடம் சுருங்கி ஆழம் இல்லாதிருந்தது. இதன் பக்கமெல்லாம் சமண மடங்கள் நிறைந்திருந்தன. இக்குளத்தை ஆழப்படுத்தி விரிவாக்க எண்ணினார் தண்டியடிகள். அதற்காக இவர் குளத்தினுள்ளே ஒரு தூணும் கரைமீது ஒரு தூணும் நட்டு இரண்டுக்கும் இடையே கயிற்றைக் கட்டினார். மண்ணை வெட்டுவது; கூடையிலே சுமந்து கயிற்றைப் பிடித்தவாறே கரைக்கு வருவது; கரையிலே அம் மண்ணைக் கொட்டுவது; இவ்வாறு தண்டியடிகள் திருப்பணிகள் நடை

பெற்றுக் கொண்டிருந்தன. என்னே இத் திருத் தொண்டின் சிறப்பு!

அங்கிருந்த சமணர் இவரது செயலைக்கண்டு பொறாமைகொண்டனர். தங்கள் இருப்பிடங்களுக்கு ஏதேனும் தீங்கு நேருமோ என அஞ்சினர். அவர்கள் தண்டியடிகளிடம் வந்து, "இவ்வாறு மண்ணை வெட்டித் தோண்டுவதால் சிறிய உயிர்கள் இறந்து படும். இச் செயல் செய்ய வேண்டாம்" என்றனர்.

அதற்கு அடிகளார், "இது சிவபிரானுக்குச் செய்யும் தொண்டு. இதனால் எவ்வுயிர்க்கும் தீங்கு நேராது" என்றார்.

"இது கேட்ட சமணர் சீற்றம் கொண்டவராய் 'நாங்கள் அறவுரை கூறுகிறோம். இதைக் கேட்க வேண்டுமே! கண் பயனில்லாது போனது போல் காதும் பயனற்றுப் போயிற்றோ?" என்றனர்.

அடிகள் இதற்குப் பதிலாக, விழியிருந்தும் குருடர்களாய், செவியிருந்தும் செவிடர்களாய் நீங்களே இருக்கிறீர்கள். எந்தை சிவனையன்றி என் விழிகள் வேறு எதையும் காணாது. இந் நுட்பம் உங்களுக்கு எங்கே விளங்கப் போகிறது? புற உலகையும் காணும் விழிகளை நான் பெற்றால் நீங்கள் என்ன செய்வீர் கள்?" என்று கூறினார்.

சமணர்கள், "அப்படி உன் தெய்வ அருளால் நீ கண்களைப் பெற்றுவிட்டால் நாங்கள் இந்த ஊரை விட்டே போய்விடுகிறோம்" என்று சொன்னார்கள்.

இதோடு மட்டுமன்றி அவர்கள் அடிகள் நட்டிருந்த தூணைப் பிடுங்கி எறிந்தார்கள். கயிற்றையும் மண் வெட்டியையும் பற்றியெடுத்து வீசினார்கள்.

தண்டியடிகள் நெஞ்சம் துன்பத்தால் நொந்தது. அவர் நேராகத் திருக்கோயில் சென்றார். இறைவரிடம் சமணர்கள் செய்த அட்டூழியங்களை அறிவித்தார். தமக்கு அவர்களால் நேர்ந்த இழிவை நொந்து கூறினார். அவரை அருள் சுரக்க வேண்டிக்கொண்டார். பின்னர் தம் தங்கும் திருமடம் சென்று மிக்க துயரத்தோடு துயில் கொண்டார்.

அன்றிரவு அவரது கனவில் விடையேறிய பெருமான் தோன்றி, "கவலை கொள்ளற்க. உன் தொண்டு செவ்வனே நடக்க, நீ விழிபெறவும் சமணர் கள் குருடர்களாகவும் அருள் செய்வோம்" என்று அருளி மறைந்தார். அன்றே சோழ மன்னன் கனவிலும் இறையனார் வந்து "நம் திருப்பணியைத் தண்டி செய்துள்ளான். இதற்குச் சமணர்கள் இடையூறு விளை வித்தனர். அவன் கருத்து முற்றுப் பெற நீ உதவு வாயாக!" என்று திருவாய் மலர்ந்தார். விழிப்புற்ற மன்னன் சிவபிரான் பேரருளை நினைந்து நினைந்து வியந்தான்.

மறுநாள் பொழுது புலர்ந்ததும் மன்னன் தண்டி யடிகள் இருக்கை சென்று வணங்கி, தன் கனவைக் கூறி அவருக்கு ஏற்பட்ட துன்பத்தை என்னவென்று வினவினான். அடிகளார் நடந்த நிகழ்ச்சியை அறிவித்தார். மன்னன் சமணர்களை அழைத்துக்

கேட்டான். அவர்கள், "தண்டி கண்பார்வை பெற்றால் நாங்கள் இவ்வூரை விட்டுப் போய் விடுகிறோம்" என்று தங்கள் பேச்சை அறிவித்தார்கள்.

அடிகள் தாம் திருப்பணி செய்து வந்த குளக் கரைக்கு வந்தார். மன்னனோடு சமணர்களும் அங்கே வந்தார்கள். மன்னன் அடிகளாரை நோக்கி, "சிவன் அருட்செல்வரே, அவனருளால் கண் பெற்றிடுக!" என்று சொல்லவும் அடிகளார் "நான் பிறைசூடிய பெருமானுக்குத் தொண்டு செய்வது உண்மையே யானால் எனக்கு அப்பெருமான் கண்வழங்குவாராக!" என்று சொல்லி அஞ்செழுத்து மந்திரத்தை ஓதிக் குளத்தில் இறங்கி நீரில் மூழ்கி எழுந்தார். எழுந்தவர் கண் பெற்றிருந்தார். அங்கு நின்ற சமணர்களோ கண் களை இழந்து தத்தளித்தனர். அடிகளார் தமக்கு அருள் வழங்கிய ஆண்டவரின் கருணைப் பெருக்கை நினைந்து உள்ளம் உருகினார்.

சமணர்கள் தம் பேச்சு உறுதிப்படி அவ்வூரை விட்டு வெளியேறினார்கள். தண்டியடிகள் தமது திருப் பணியை எவ்வித இடையூறுமின்றி இனிதே முடித்தார். மன்னனும் அடிகளார் அடிபணிந்து வேண்டும் உதவிகள் செய்து கொடுத்தான். இறைவர் திருத் தொண்டைச் செய்து அடிகளார் இறுதியில் சிவனார் திருவடி நீழல் சேர்ந்தார்.

அடியார் வேண்டுதலுக்குச் செவி சாய்க்கும் இறைவர் பேரருளை இவ்வரலாறு விளக்குகிறது.

11. சூதாடி அடியாரைப் பேணியவர்

துலங்கு புகழ் கொண்ட தொண்டை நாட்டில் திருவேற்காடு சீர்மிக்க பதியாகும். இப்பகுதியில் வேளாளர் மரபில் தோன்றிய பேராளர் மூர்க்க நாயனார் ஆவர். இவர் சிவபெருமானிடம் சிந்தைகொண்டவர். அவரது அடியார்களுக்கு அமுதளித்த பிறகே தாம் உண்ணும் வழக்கத்தினர்.

அவரை நாடி வரும் அடியார் கூட்டம் வரவரப் பெருகலாயிற்று. மன ஆர்வத்தோடு இவர் அவர்களுக்கு அமுதளித்து வந்தார். இவ்வறச் செயலால் இவரிடமிருந்த செல்வமெல்லாம் தீர்ந்தது. எனினும் திருப்பணியைத் தவறாது செய்து கொண்டிருந்தார். நிலபுலங்களையும் பிற பொருட்களையும் விற்றார். இதன் பின்னர் இவரிடம் அடியார்க்கு உணவளிக்கப் பணமில்லாது போயிற்று. மனம் நொந்து பணம் தேடும் சிந்தனையில் மூழ்கினார்.

இளம் பருவத்தில் நாயனார் சூதாடுவதில் வல்ல வராய் இருந்தார். இந்த வறிய நிலையில் மீண்டும் அச்செயலில் ஈடுபட எண்ணினார். சூதாடிப் பணம்

சேர்க்கலானார். அப்பணத்தில் தாம் எதுவும் எடுக்காது அடியார்களுக்கு அமுதூட்டுவதிலேயே செலவு செய்து வந்தார். ஆடுவது சூதாயினும் அதிக நேர்மையைக் கடைப்பிடித்து வந்தார். எனவே இவர் நற்சூதர் என அழைக்கப்படுவார். எவரேனும் இவ்வாடலில் வஞ்சகம் செய்தால் அவர்களை உடைவாளால் குத்தி விடுவார். இதனால் இவருக்கு மூர்க்க நாயனார் என்னும் திருப்பெயரும் ஏற்பட்டது.

திருவேற்காட்டில் சூதாடுவோர் இல்லாது போகவே இவர் தென்னாடு நோக்கிப் புறப்பட்டு, பல திருப்பதிகளுக்குச் சென்று சூதாடி அங்கங்கே கிடைக்கும் பணத்தை அடியார்கள் பசி நீக்குவதில் பயனாக்கிக் கொண்டார்.

இவ்வாறு அடியார்களுக்கு அமுதளித்து திருத் தொண்டு செய்து வந்த மூர்க்க நாயனார், இறுதியில் இறைவர் திருவடி சேர்ந்து இன்பப் பேறு பெற்றார்.

இழி செயலில் ஈடுபட்ட போதும் நேர்மையைக் காப்பாற்றிய மூர்க்க நாயனார் வரலாறு, அவரது ஆழமான அடியார் பக்தியைக் காட்டுகிறது.

12. அடியாரைப் போற்றி அருள் பெற்றவர்

சோழநாட்டில் திருவம்பர் என்னும் திருப்பதியில், அந்தணர் மரபில் தோன்றியவர் சோமாசி மாறர். இவர் சிவனாரிடம் சித்தம் செலுத்தவே தம் வாழ்வு வாய்க்கப் பெற்றதாக எண்ணியவர்.

அஞ்செழுத்தை ஓதி வேள்வி செய்வார். அடியார்களுக்கு அமுதளிப்பதைப் பெரும் பேறாகக் கருதி வந்தார். இத்திருப்பணிகளே தாம் கடைத்தேற வழி என்பதை இவர் கண்டு தெளிந்தவர்.

இவர் வன்தொண்டர் சுந்தரர் காலத்தில் வாழ்ந்து வந்தவர். அவரது திருவடியைப் போற்றி வழிபடத் திருவாரூர் சென்றார். சுந்தரரிடம் இடையறாத நட்புக் கொண்டு அவரை வழிபட்டு இறைவர் அருகிருக்கும் இனிய பேறு பெற்றார்.

அடியார்களிடம் அன்புகொண்டு சோமாசிமாறர் இறைவர் இன்னருள் பெற்றதை இவ்வரலாறு தெரிவிக்கிறது.

13. கல்லும் கடவுளைக் கனிவித்தது

திருச்சங்கமங்கை என்னும் திருப்பதியில் வேளாளர் மரபில் தோன்றியவர் சாக்கிய நாயனார். இவர் இப்பிறவித் துயரிலிருந்து விடுபடும் நெறிபற்றிச் சிந்தித்து வந்தார். இதற்காகவே இவர் காஞ்சியம் பதியை அடைந்தார். அங்கு பல சமய நெறிகளை ஆராயமுற்பட்டார். பௌத்த நெறியில் புகுந்து அந் நெறியில் நின்று ஒழுகினார். அந்நெறியில் நின்ற போதும் பிற சமய தத்துவங்களில் சிந்தனை செலுத்தி ஆராய்வதை அவர் விட்டுவிடவில்லை. இவ்வாராய்ச்சி யால் சாக்கியருக்கு சிவநெறியே சிறந்த நெறியெனப் பட்டது. சிவபிரானே உண்மைத் தெய்வம் என்பதை உணர்ந்தார். எனினும் அவர் பௌத்த வேடம் துறக்காது சிவனார் திருவடிகளில் சித்தம் ஈடுபடுத் தினார். எக்கோலம் கொள்ளினும் உள்ளத்தின் ஈடுபாடன்றோ முக்கியம்!

இந்த ஈடுபாடு அவரிடம் ஓர் செவ்விய பழக்கம் தோன்றக் காரணமாயிற்று. அதாவது சிவலிங்கத்தை வழிபட்ட பிறகே உணவு உண்ண வேண்டும் என்பதே.

தம் மனத்திலே சிவலிங்கத்தை நிலையாகப் பதித்து ஐந்தெழுத்தை ஓதி வழிபட்டு வந்த சாக்கிய நாயனார் ஒருநாள் வெளியிடத்தில் சிவலிங்கத்தைக் கண்டார். அவரது நெஞ்சம் கனிந்து நெகிழ்ந்தது. இறைவர்பால் கொண்ட பேரன்பால் கசிந்து கண்ணீர் ததும்பினார். இறையை வழிபடும் எண்ணம் அவரிடம் மேலோங்கி எழுந்தது. வாச மலரால் வழிபட வேண்டும். அங்கே அவருக்கு அம்மலர் எவ்வாறு கிடைக்கும்? கண்ணிலே கண்ட கல்லையெடுத்து எல்லையில்லாத அன்புப் பெருக்கால் மலரிடுவது போல் அதை சிவலிங்கத்தின்மீது எறிந்தார். குழந்தைகள் செய்யும் அன்புச் செயலெல்லாம் பெற்றோர்க்கு இன்பம் தருவதன்றோ! இறைவருக்கும் அக்கல் அர்ச்சனை இன்பத்தையே அளித்தது.

மறுநாளும் இதுவே நடந்தது. 'கல்லால் எம் பெருமானை வழிபடவேண்டும் என்ற எண்ணத்தை என் இதயத்தில் அவரே உண்டாக்கியிருக்க வேண்டும். எனவே இது அவருக்கு உவகை தரும் செயலே' என எண்ணியவராய் அவ்வாறு வழிபட்டார். நாள்தோறும் இவ்வாறே இறைவரைக் கல்லால் அர்ச்சித்து வந்தார்.

ஒருநாள் இவ் வழிபாட்டை மறந்து உணவு கொள்ள இருந்தார். அப்போது இறைவருக்குத் தாம் செய்து வரும் தொண்டை மறந்த நினைவு அவரிடம் தோன்றியது. 'ஐயோ, பெரும் பிழை செய்தேனே! என்றவாறு எழுந்தார். வேக கதியில் நடந்தார். சிவலிங்கப் பெருமானைக் கண்டு கசிந்தார். கல் ஒன்றை எடுத்து சிவலிங்கப் பெருமான்மீது எறிந்து

வழிபட்டார். சாக்கிய நாயனாரின் பேரன்பு இறைவரைக் கனிவித்தது. அவர் உமாதேவியாருடன் விடையில் தோன்றி அவருக்கு நற்பேறளித்தார்.

உண்மையான பக்தி கொண்டவர்கள் செய்யும் வன்செயலும் இறைவர்க்கு விருப்பை அளிக்கும் என்பதைச் சாக்கிய நாயனார் வரலாறு தெரிவிக்கிறது.

14. திருத்தொண்டால் சிவனாரைச் சேர்தல்

காவிரி பாயும் சோழநாட்டில் திருவாக்கூர் என்னும் பதி சிறப்பு கொண்டது. இப் பதியில் அந்தணர் மரபில் தோன்றியவர் சிறப்புலி நாயனார்.

இவர் பண்புகள் அனைத்தும் நிரம்பியவர். சிவபெருமானிடம் சிந்தை செலுத்தியவர். அவரது அடியார்களுக்கு வேண்டுவன கொடுத்து விருந்து செய்வார். ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதி அரனார்க்கு வேள்வி செய்து ஆனந்தமுற்றிருந்தவர். இவ்வாறு இவர் நாளும் சிவனாருக்கு உகந்த திருத்தொண்டுகள் செய்து அவர் திருவடி நிழலை அடைந்தார்.

இறைவரை நினைந்து வழிபடுவோர்க்கு அவரது இன்னருள் பேறு கிடைக்கும் என்பதைச் சிறப்புலி நாயனாரின் இவ்வரலாறு தெரிவிக்கின்றது.